தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

21.11.2013

## எலுமிச்சை சாகுபடியில் உயர் மகசூல்!



எலுமிச்சை சாகுபடியில் பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தால் உயர் மகசூல் பெற்று லாபம் ஈட்டலாம் என தோட்டக்கலைத் துறை தெரிவித்துள்ளது.

எலுமிச்சை சாகுபடியில் பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தால் உயர் மகசூல் பெற்று லாபம் ஈட்டலாம் என தோட்டக்கலைத் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து தோட்டக்கலைத் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு: எலுமிச்சை சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்க

வேண்டும். இலைத் திசுத் துளைப் பூச்சி, சாறு உறிஞ்சும் பூச்சிகள், பழம் உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் காரணமாக மகசூல் பாதிக்க வாய்ப்புள்ளது.

இலைத் திசுத் துளைப் பூச்சி: இலையின் உள் அடுக்குகளுக்குள் புகுந்து சுரண்டி சாப்பிடும் மெல்லிய புழு இது. தாக்கப்பட்ட இலைகளில் புழுக்கள் ஊடுருவிச் சென்ற பாதை வளைந்து நெளிந்து காணப்படும். நாளடைவில் காய்ந்து விழுந்து விடும். இப் பூச்சியின் தாக்குதல் காணப்பட்ட மரங்களில் டிரிஸ்டிசா வைரஸ் நோய் எளிதில் தாக்கும்.

இந்த நோயை வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிகிதம் அல்லது வேப்பம் எண்ணெய் 3 சதவிகிதம் தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் நீரில் ஒரு மிலி டைக்குளோர்வாஸ் அல்லது மானோகுரோட்டோபாஸ் தெளித்தும் கட்டுபடுத்தலாம்.

சாறு உறிஞ்சும் பூச்சிகள்: எலுமிச்சையில் தாக்கும் வெள்ளை ஈயை ஒரு லிட்டர் நீரில் 2 மிலி குயினோல்பாஸ் 25 ஈசி மருந்து கலந்து தெளிக்கலாம். கருப்பு ஈயை ஒரு லிட்டர் நீரில் ஒன்றரை மிலி மானோகுரோட்டோபாஸ் மருந்து கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

துரு சிலந்தி பூச்சியை ஒரு லிட்டர் நீருக்கு 2 கிராம் நனையும் கந்தகம் அல்லது இரண்டரை மிலி டைக்கோபால் மருந்துகளில் ஒன்றைத் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

அசுவினி பூச்சியை ஒரு லிட்டர் நீரில் ஒரு மிலி மானோகுரோட்டோபாஸ் அல்லது மிதைல் ஓ டெமட்டான் மருந்துகளில் ஒன்றை தெளிக்க வேண்டும்.

பழம் உறிஞ்சும் அந்துப் பூச்சி: இந்த அந்து பூச்சிகள் பழங்களின் சாற்றை உறிஞ்சு குழல் மூலம் உறிஞ்சி உண்ணும். சாறு உறிஞ்சப்பட்ட பழங்கள் அழுகி உதிர்ந்து விடும். இப் பழங்களில் பூஞ்சாணங்களின் தாக்கமும் எளிதல் உண்டாகும்.

அந்து பூச்சிகள் களைகளிலேயே முட்டையிட்டு பெருகுவதால், களைகளை கட்டுப்படுத்துவது மிகவும் அவசியம். பாலிதீன் பை கொண்டு பழங்களைக் கட்டி விட்டு சிறு துவாரங்கள் போடுவதால் காற்றோட்டம் பெருகிப் பூஞ்சாணம்

தாக்குவது தவிர்க்கப்படும். பூச்சிகளும் பழங்களை சேதப்படுத்துவது கட்டுப் படுத்தப்படும்.

நுனிக் கிளைப் புழுவை காய்ந்த கிளைகளை அகற்றி விட்டு ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மிலி மானோகுரோட்டோபாஸ் அல்லது 2 கிராம் கார்பரில் 50 சதவிகிதம் நனையும் தூள் மருந்துகளில் ஒன்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

தண்டுப் புழு, நுனிக்கிளைப் புழுக்களை கட்டுப்படுத்த பயிரின் காய்ந்த கிளைகளை அவ்வப்போது வெட்டி எடுக்க வேண்டும். வண்டு துளைத்த பகுதியில் 5 முதல் 10 மிலி பெட்ரோல் அல்லது குளோரோபார்ம் உள் செலுத்தி காற்றுப்புகாதவாறு அடைத்து விட வேண்டும். முறையாக கோடை உழவு மேற்கொள்ள வேண்டும்.

பயிரைத் தாக்கும் நுனிக்கிளை வாடல் நோயை, பாதிக்கப்பட்ட நுனிக் கிளைகளை அகற்றி விட்டு ஒரு லிட்டர் நீருக்கு 3 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு அல்லது ஒரு கிராம் கார்பண்டசிம் மருந்துகளில் ஒன்றை 30 நாட்கள் இடைவெளியில் தெளிந்து கட்டுப்படுத்தலாம்.

பயிர் பாதுகாப்பு முறை: எதிர்ப்புத் திறன் கொண்ட எலுமிச்சைக் கன்றுகளை நடவு செய்ய வேண்டும்.

எலுமிச்சையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து, எலுமிச்சை சாகுபடியாளர்கள் உயர் மகசூல் பெற்று உன்னதமான லாபமும் ஈட்ட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உழவர்களுக்கு உதவும் கார்த்திகை தீபம், சொக்கப்பனை**



விவசாயிகளுக்கு உதவிடும் வகையிலேயே கார்த்திகை மாதத்தில் வீடுகள் முழுவதும் விளக்கேற்றும் வழக்கத்தைக் கடைப்பிடித்துள்ளனர் முன்னோர்கள். உழவர் பெருமக்களுக்கு உதவிட சமூகத்தினர் செய்த உதவித் திருவிழாவே தீபத் திருவிழா எனவும் அழைக்கப்படுகிறது.

இது குறித்து திருநெல்வேலி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு.பாலசுப்பிரமணியன் கூறியிருப்பதாவது:

பூச்சித் தாக்குதல் மிகுந்த பருவம்: பனியும், மழையும் அதிகரித்துக் காணப்படும் ராபிப் பருவம் என்ற பின்பருவத்தில்தான் பூச்சித் தாக்குதல் அதிகம் காணப்படும். பிசானம், தாளடி, சம்பா பயிர்கள் இந்தப் பூச்சித் தாக்குதலுக்கு ஆளாகின்றன. வடகிழக்குப் பருவமழை காரணமாக கூட்டுப் புழுக்களில் இருந்து தாய் அந்துப் பூச்சிகள் அதிகளவில் வெளிவரும். இந்த அந்துப் பூச்சிகள் இடும் முட்டையிலிருந்துதான் புழுக்களும், பூச்சிகளும் உருவாகி பயிர்களைத் தாக்கி சேதப்படுத்துகின்றன.

இத்தகைய தாக்குதலுக்கு மூல காரணமாக விளங்கும் தாய் பூச்சிகளை விளக்கு வெளிச்சத்தால் கவர்ந்து அழிப்பதன் மூலம் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். இந்த விளக்குப் பொறியைத் தான் திருக்கார்த்திகை தீபம் என்ற அடிப்படையில் வீடுகளில் ஏற்றி வைத்து முன்னோர்கள் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

வீடு தோறும் விளக்கு: முன்னிரவு நேரத்தில்தான் பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் நடமாட்டம் அதிகம் காணப்படும். எனவே, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பின் ஒரு பகுதியாக வீடுகள்தோறும் வாயில்களில் விளக்கு வைக்கப்படுகிறது.

திருக்கார்த்திகை நாளிலும், அதன் தொடர்ச்சியாக மூன்று நாள்களிலும் அதிக அளவில் விளக்குகள் ஏற்றப்படுகின்றன. மேலும், பலர் கார்த்திகை மாதம் முழுவதுமே வீடுகளில் வாசலில் தீபம் ஏற்றுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். இந்த விளக்கு வெளிச்சத்தில் முன்னிரவு நேரத்தில் வரும் தீமை செய்யும் பூச்சிகள் கவர்ந்து இழுத்து அழிக்கப்படுகின்றன.

சொக்கப்பனை: பெரிய அளவில் பூச்சிகளைக் கவர்ந்து இழுத்து அழிக்க சொக்கப்பனை எரிக்கும் நிகழ்வு பெரிதும் உதவியாக உள்ளது. கார்த்திகையை முன்னிட்டு கோவில்களிலும், வீதிகளிலும் சொக்கப்பனைகள் கொளுத்தப்படுகின்றன. சிவன், முருகன், பெருமாள் கோவில்களில் வெவ்வேறு நாள்களில் இந்த சொக்கப்பனை கொளுத்தப்படுவதால் விடுபட்ட பூச்சிகளும் முழுமையாக அழிக்கப்படுகின்றன என்றார் அவர்

**நிலக்கடலையை பிரித்தெடுக்கும் இயந்திரம்**



நிலக்கடலையை தனியாகப் பிரித்தெடுக்கும் இயந்திரம் குறித்து விவசாயிகளுக்கு நடைபெற்ற செயல்விளக்கம்.

எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலையை தரத்துடன் பிரித்தெடுக்க இயந்திரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டலாம் என டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தரராஜ் தெரிவித்தார்.

நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக எண்ணெய் வித்துப் பயிர்கள் திகழ்கின்றன. எண்ணெய் வித்துப் பயிர்கள் மட்டும் 1.65 கோடி ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன.

இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட மிக முக்கியமான எண்ணெய் வித்துப் பயிராக நிலக்கடலை விளங்குகிறது. தமிழகத்தில் நிலக்கடலையானது 25 சதம் மானாவாரியாகவும், 75 சதம் இறவையிலும் சாகுபடி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 11,214 ஹெக்டேர் பரப்பளவில் மானாவாரியாக நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நிலக்கடலையை அறுவடை செய்வதற்கு ஆள்கள் பற்றாக்குறையாலும், கிடைக்கும் ஆள்களுக்கு அதிக கூலி கொடுக்கும் நிலைக்கும் விவசாயிகள் ஆளாகியுள்ளனர்.

இதனால் அவர்கள் பொருளாதார இழப்பை சந்தித்து வருகின்றனர். தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகளிடம் அறுவடை செய்த பயிரிலிருந்து நிலக்கடலையைப் பிரித்தெடுக்கும் இயந்திரம் குறித்து செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டு வருகிறது.

இந்த இயந்திரத்தின் மூலம் அறுவடைக்குப் பிறகு கடலைகளை தனியாகப் பிரிக்கப் பயன்படுத்தப்படும் வேலை ஆள்களின் தேவையைப் பாதியாக குறைக்க முடியும். மேலும், கிராமப்புற விவசாயிகள், பெண்கள் இந்த இயந்திரத்தை எளிதாக கையாளலாம்.

ஒரு ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட நிலக்கடலை செடிகளைப் பிடுங்கி, அதிலிருந்து கடலைகளை தனியாகப் பறித்து எடுக்க சுமார் 40 ஆள்கள் தேவைப்படுவர். தற்போதைய நிலையில், ஒரே நேரத்தில் இவ்வளவு எண்ணிக்கையிலான ஆள்கள் கிடைப்பது கடினம். மேலும், வேலை ஆள்களுக்கு கூலியாக ரூ.4,800 வரை செலவாகிறது.

இந்த இயந்திரத்தின் மூலம் நிலக்கடலைச் செடிகளை மட்டும் நிலத்திலிருந்து வேலை ஆள்களைக் கொண்டு அறுவடை செய்ய வேண்டும். அதற்கு சுமார் 15 பேர் தேவைப்படுவார்கள். பின்னர், இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி நிலக்கடலை காய்களை மட்டும் தனியாகப் பிரிக்க 8 பேர் போதுமானது. இவ்வாறு செய்யும்போது ஒரு ஏக்கருக்கு ரூ.2,670 மட்டுமே செலவாகிறது. காய்கள் தனியாகவும், கொடி தனியாகவும் கிடைக்கப்பெறும்.

இந்த இயந்திரத்தை 8 மணி நேரம் தொடர்ந்து இயக்கினால் 1.5 யூனிட் வரை மின்சாரம் செலவாகும். நிலக்கடலை மணிகளைப் பிரிக்கும்போது கடலைகள் உடையாது. இந்த இயந்திரத்தின் விலை ரூ.22 ஆயிரம் ஆகும்.

மேலும் விவரங்களுக்கு டி.சுந்தர்ராஜ், திட்ட ஒருங்கிணைப்பாளர், டாக்டர் பெருமாள் வேளாண்மை அறிவியல் மையம், எலுமிச்சங்கிரி கிராமம், கிருஷ்ணகிரி என்ற முகவரியிலோ அல்லது 94438 88644 என்ற கைபேசி எண்ணிலோ அல்லது 04343-296039, 201030 என்ற தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொள்ளலாம்

**நாகையில் நவ. 27-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

நாகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாகை மாவட்ட ஆட்சியரக முதன்மைக் கூட்ட அரங்கத்தில் புதன்கிழமை நவ. 27-ம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் கருத்துகளைத் தெரிவிக்குமாறு நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தனது செய்திக் குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**22-ல் விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் நவம்பர் 22-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற உள்ளதாக ஆட்சியர் கா.பாஸ்கரன் அறிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வரும் நவம்பர் 22-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.இக்கூட்டத்தில், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு விவசாயம் மற்றும் விவசாயம் தொடர்பான கோரிக்கைகள் குறித்து மனுவாக அளிக்கலாம்

**எந்தப் பயிரை சாகுபடி செய்யலாம்: ◌ாலநிலை ஆய்வு மையம் ஆலோசனை**

தமிழகத்தின் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எந்தப் பயிரை எந்தெந்தப் பருவத்தில் சாகுபடி செய்யலாம், அந்தப் பகுதியில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கேற்ற பயிரில் பூச்சி, நோய் தாக்குதல் சம்பந்தப்பட்ட அனைத்து

புள்ளிவிவரங்களையும் விவசாயிகளுக்கு நேரடியாகத் தரும் வகையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மதுரை மாவட்டத்தில் 4 இடங்களில் காலநிலை ஆய்வு மையத்தை நிறுவியுள்ளது.

தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் முதல் கட்டமாக 224 ஒன்றியங்களில் இந்த தானியங்கி காலநிலை ஆய்வு மையத்தை தலா ரூ.4.5 லட்சம் செலவில் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. மதுரை கிழக்கு, மேற்கு, அலங்காநல்லூர் மற்றும் கொட்டாம்பட்டி ஆகிய இடங்களில் இம் மையம் நிறுவப்பட்டுள்ளது. காலநிலையை வெயில் காலம், மழைக் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் கலாம், குளிர் காலம் என முன்னோர்கள் பகுத்துள்ளனர். காலநிலை மாறுதலால் மனிதனுக்கு எப்படி காய்ச்சல், தலைவலி வருகிறதோ, அதுபோல பயிர்களுக்கும் காலச் சூழ்நிலை மாறுதலின்போது பல தோஷங்கள் பிடிக்கின்றன. பூச்சி, பூஞ்சாளங்கள், நோய்க் கிருமிகளும் உருவாகி பயிர்களைத் தாக்குகின்றன. நெல் பயிரை 40 வகையான பூச்சிகள் பாதிக்கச் செய்கிறது.

தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் நிறுவப்பட்டுள்ள தானியங்கி காலநிலை ஆய்வு மையங்கள் அந்த வட்டாரத்தில் காலை, மாலையில் நிலவும் அதிக வெப்பம், குறைந்த வெப்பம், குளிர், மழைக்கான வாய்ப்பு, காற்றின் ஈரப்பதம் ஆகிய விவரங்களை துல்லியமாகக் கணக்கிட்டு, கோவை வேளாண்மை பல்கலை.யில் நிறுவப்பட்டுள்ள தலைமை கட்டுப்பாட்டு மையத்துக்கு அனுப்பிவைக்கும். அங்கு அனைத்து ஒன்றியங்களிலும் இருந்துவரும் தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன. பொதுவாக, தமிழகத்தில் மாவட்ட அளவிலான சீதோஷ்ண நிலை தொகுக்கப்பட்டு, 54 வகையாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. காற்றில் 90 சதம் ஈரப்பதம் நிலவினாலே பூச்சி, நோய் உருவாக ஏற்ற சீதோஷ்ண நிலையாகும். 32 செல்சியஸ்ý்க்கு மேல் சென்றால் தக்காளி காய்கள் கனிந்துவிடும். இக் காலநிலையில், எந்த வட்டாரத்தில் எந்தெந்தப் பயிரில் எந்த பூச்சி, நோய் தாக்க ஏற்ற கால நிலை நிலவுகிறது எனக் கணிக்க முடியும். அந்த பூச்சி, நோய்க்கான அறிகுறிகள் என்ன, அதை எந்த மருந்து மூலம் கட்டுப்படுத்த முடியும் என ஒன்றிய வேளாண் உதவி இயக்குநர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

அதேசமயம், தானியங்கி மையத்தில் ஒன்றிய அளவிலான விவசாயிகள் அலைபேசி எண்கள் பட்டியலிடப்பட்டு, அவர்களது நிலத்திலுள்ள சாகுடியான பயிர், எப்போது பயிரிடப்பட்டது போன்ற விவரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளதால், நோயை முற்றிலும் முன்னெச்சரிக்கையாகத் தடுக்க முடியும்.

மேலும், இதன்மூலம் விவசாயிகள் நாற்றங்கால் தயாரித்தல், விதைத்தல், தண்ணீர் பாய்ச்சுதல், மருந்து தெளித்தல், களையெடுப்பு அறுவடைக்கான கூலியாள்களைத் தயார் செய்வது போன்றவற்றை வானிலை நிலவரத்தை வைத்து ஏற்பாடு செய்து கொள்ளமுடியும். இதற்காக தற்போது மாநிலத்தில் 14 மாவட்டங்களில் உள்ள ஒன்றியங்களில் புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டு, எந்தெந்தெந்த பகுதியில் என்னென்ன பயிர் அதிகம் பயிரிடப்படுகிறது என 10 வகையான பயிர் பட்டியலும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்த புள்ளிவிவரங்கள் வட்டார உதவி இயக்குநர்கள் கூட்டம் நடத்தப்பட்டு விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது.

2014 மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் முதல் மாநில அளவிலான தானியங்கி காலநிலை ஆய்வு மையங்கள் முழுமையாகச் செயல்பாட்டுக்குவரும் என்றார் திட்ட இயக்குநர் டிஎன்.பாலசுப்பிரமணியன். மதுரை வேளாண். அறிவியல் மையத் தலைவர் நசோ.வெங்கடராமன், பூச்சி, நோயியல் துறை உதவி பேராசிரியர் கோ.ஸ்ரீனிவாசன், தோட்டக் கலைத் துறை உதவிப் பேராசிரியர் ரவீந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களை கையாள வேண்டும்**

விவசாயிகள் நவீன தொழில் நுட்பங்களை கையாள வேண்டும் என்று வேளாண் அதிகாரி வலியுறுத்தி உள்ளார்.

ராமநாதபுரம் அருகே குத்துக்கல் வலசை கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் எண்ணெய் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு புதன்கிழமை ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.

பயிற்சி முகாமிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் கருப்பையா தலைமை வகித்தார். விதை ஆய்வு துணை இயக்குநர் மணிமாறன், விதைச் சான்று உதவி

இயக்குநர் மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்புல்லாணி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ். முகம்மது அப்துல் நசீர் அனைவரையும் வரவேற்று பேசினார். பயிற்சி முகாமில் விவசாயிகளுக்கு விதைச்சான்று அட்டைகளை வழங்கி வேளாண்மை இணை இயக்குநர் நா.வீ. கிருஷ்ணமூர்த்தி பேசியது, நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

திரட்சியான நிலக்கடலை பெற ஜிப்சம் ஏக்கருக்கு 160 கிலோ இட்டு மண் அணைக்க வேண்டும்.

விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை கடைபிடித்தால் மகசூலை இரட்டிப்பாக்கவும், வருமானத்தை மூன்று மடங்காக்கவும் முடியும். விவசாயிகள் விதை வாங்கும் போது, சான்று அட்டை பொருத்தப்பட்டிருக்கிறதா, காலக்கெடு உள்ளதா எனப் பார்த்து வாங்க வேண்டும். காலக்கெடு முடிந்த விதைகளை வாங்கினால், அவை விதை முளைப்புத் திறன் குறைந்து இருக்கும்.

இதனால் மகசூல் இழப்பு ஏற்படும் என்றும் பேசினார். தென்னைக்கு உரமிடுதல், தென்னையை தாக்கும் சிகப்புக் கூண்வண்டு, காண்டாமிருக வண்டு,

கருந்தலைப்புழு கட்டுப்பாடு ஆகியன குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. தென்னையில் கூடுதல் மகசூல் பெற ஊடுபயிராக தட்டைப்பயிறு விதைக்கலாம் என்ற ஆலோசனையையும் அதிகாரிகள் வழங்கினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை துணை வேளாண்மை அலுவலர் கணேசன், உதவி வேளாண்மை அலுவலர் முகம்மது யூசுப் ஆகியோர் செய்திருந்தனர்.

**கோமாரி நோய்: 4 கிராமங்களில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்**

கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான சிறப்பு முகாம் ஸ்ரீ மகாவீர் ஜெயின் அசோசியேஷன் மற்றும் எஸ்.புக்ராஜ் ஜெயின் கட்டோடு அறக்கட்டளை ஆகியவை சார்பில் சிதம்பரம் அருகே 4 கிராமங்களில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்களுக்கு ஜெயின் சங்கத் தலைவர் எம்.மகாவீர் சந்த் போகரா தலைமை வகித்தார். அறக்கட்டளை நிர்வாகி பி.நிர்மலசந்த் கட்டோடு, டாக்டர் எம்.அப்துல்ரஹீம் தலைமையிலான கால்நடை மருத்துவக் குழுவினர்  கூடுவெளி, வடமூர், தெம்மூர், செட்டிக்கட்டளை ஆகிய கிராமங்களுக்குச் சென்று கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட 150-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்புஊசி போட்டு மாத்திரை மற்றும் மருந்துகளை வழங்கினர்.

**நெல் குவிண்டாலுக்குரூ. 2,000 வழங்க வலியுறுத்தல்**

நெல் குவிண்டாலுக்கு ரூ. 2,000 வழங்க வேண்டுமென்று மாவட்ட விவசாயிகள் பாதுகாப்பு நலச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

திருவாரூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட விவசாயிகள் பாதுகாப்பு நலச் சங்கத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிற தீர்மானங்கள்:

கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு ரூ. 20,000, கிடேரிகளுக்கு ரூ. 10,000, கன்றுகளுக்கு ரூ. 5,000 வழங்க வேண்டும். காவிரி நீரில் தமிழகத்திற்கு உரிய பங்கை பெற்றுத்தர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நன்னிலம் தாலுகாவில் கடந்த அக்டோபர் மாதம் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட 200 ஏக்கர் சாகுபடிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 8,000 இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**"கோமாரி நோய் குறித்து கால்நடை வளர்ப்பவர்கள் அறிந்து கொள்வது அவசியம்**

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கால்நடை விவசாயிகள் கோமாரி நோய் குறித்த அறிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் சிகிச்சையளித்து கால்நடைகளை பாதுகாக்க வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே வேலுகுடி ஊராட்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கோமாரி நோய் விழிப்புணர்வு கிராமசபைக் கூட்டத்தில் மேலும் அவர் பேசியது:

மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள கோமாரி நோய் குறித்து பொதுமக்கள் மற்றும் கால்நடை உரிமையாளர்கள் அறிந்து நோய் வராமல் தடுக்க, பாதிக்கப்பட்ட கால்நடைகளை பாதுகாக்க மாவட்டத்தில் உள்ள 430 ஊராட்சிகளிலும் சிறப்பு கிராமசபைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு சிறப்பு மருத்துவ குழுக்களால் நோய் தாக்கத்தை நீக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஹைட்ரஜன் பெராக்சைடு மருந்து கொண்டு பாதிக்கப்பட்ட மாடுகளின் காயங்கள் மீது சுத்தம் செய்யும் பணியும் கால்நடைத் துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

இதற்காக கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நோய்பாதித்த கால்நடைகளை பராமாரிக்க தக்க அறிவுரைகள் கால்நடை பராமாிப்பு மற்றும் மருத்துவ குழுவினரால் வழங்கப்படுகிறது என்றார் நடராசன்.

கூட்டத்தில் மன்னார்குடி கோட்டாட்சியர் சுப்பு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மயில்வாகனன், பயிற்சி துணை ஆட்சியர்கள் ராஜராஜன், ஜானகி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"விவசாயிகளுக்கு மானியத்துடன் பவர் டில்லர் வழங்க ரூ. 1.96 கோடி ஒதுக்கீடு'**

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நாகை மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் நவீன இயந்திரங்கள் வழங்க வேளாண் பொறியியல்துறைக்கு ரூ. 1.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

மாவட்ட ஆட்சியரகத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற, பவர் டில்லர் வழங்கும் நிகழ்ச்சியில் அவர் பேசியது:

விவசாயப் பணிகளுக்கான தொழிலாளர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு விவசாயிகளுக்கு மானிய விலையில் நவீன இயந்திரங்களை வழங்கி வருகிறது. 2013-14-ம் ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50

சதவீத மானியத்துடன் விவசாயிகளுக்கு நவீன வேளாண் இயந்திரங்கள் வழங்க அரசு ரூ. 1.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

விவசாயிகள் இந்தக் கருவிகளைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். நவீன வேளாண் கருவிகள் தேவைப்படும் விவசாயிகள், நாகை மற்றும் மயிலாடுதுறையில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களைத் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார் ஆட்சியர் து. முனுசாமி.

இதைத் தொடர்ந்து, தலா ரூ. 1.55 லட்சம் மதிப்பிலான பவர் டில்லர் இயந்திரங்கள், ரூ. 45 ஆயிரம் மானியத்துடன் 10 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

**கோமாரி நோய்த் தடுப்பு முகாம்:அரியலூர் ஆட்சியர் ஆய்வு**

அரியலூர் மாவட்டம், குருவாடி கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்ற கோமாரி நோய்த் தடுப்பு முகாமை மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருமானூர் ஊராட்சி ஒன்றியம், குருவாடி கிராமத்தில்

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்த் தடுப்பிற்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர், விவசாயிகளின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று அனைத்து கால்நடைகளையும் தகுந்த முறையில் சிகிச்சை அளிக்கவும், கோமாரி நோய் கால்நடைகளுக்கு வராத வண்ணம் பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு தெளிவாக தெரிவிக்க கால்நடை மருத்துவர்களுக்கு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட கால்நடைகளை தனிமைப்படுத்தவும், மேய்ச்சலுக்கு அனுப்பாமலும், கன்றுகளுக்கு தாய்ப் பால் ஊட்டாமலும், கன்றுகளை

தனிமைப்படுத்தி, பாலை காய்ச்சி குளிர வைத்து ஊட்டுமாறு விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

கிராமங்களில் உள்ள கால்நடை கொட்டகைகளுக்கு 4% சோடியம் ஹைட்ராக்ஃஸைடு தெளிக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு சுற்று வட்டாரங்களில் பிளீச்சிங் பவுடர் கொண்டு கிராமத்தை சுகாதாரமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளுமாறு ஊராட்சித் தலை

வருக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்த ஆட்சியர் விவசாயிகள் கவனமுடன் கால்நடைகளை பராமரிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

முகாமில், கோட்டாட்சியர் கணபதி, கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் பத்மநாபன், மருத்துவர்கள் இளங்கோவன், ஆய்புக்கான், பாஸ்கரன், ரமேஸ், வேல்முருகன், முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோமாரி நோய் தடுப்புப் பணிகளை தீவிரப்படுத்த ஆட்சியர் அறிவுரை**

கோமாரி நோய் தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என, அரசு அலுவலர்களுக்கு கிருஷ்ணகிரிமாவட்ட ஆட்சியர் அறிவுரை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து ஊரக வளர்ச்சித் துறை, பேரூராட்சிகள் துறை, நகராட்சித் துறை சார்பில், புதன்கிழமை நடைபெற்ற நோய்த் தடுப்பு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமை வகித்துப் பேசியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இந்த நோயை முற்றிலும் கட்டுப்படுத்தும் வகையில் நோய்த் தடுப்பு ஒருங்கிணைப்புக் குழுவில் இணைந்துள்ள துறைகளும் தங்களது துறை சார்பில் பணியாற்ற வேண்டும்.

குறிப்பாக ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அனைத்து கிராமங்களிலும் கால்நடைகள் உள்ள இடங்களில் பிளீச்சிங் பவுடர் தினமும் தெளிக்க வேண்டும். நீர் நிலைகள் உள்ள இடங்களிலும் பிளீச்சிங் பவுடர் தெளிக்க வேண்டும்.

நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டாலோ அல்லது கிடைக்கப் பெற்றாலோ அலுவலர்களே கால்நடை மருத்துவர்களை அணுகி கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், அனைத்துக் கால்நடைகளுக்கும் தவறாமல் தடுப்பூசி போட வேண்டும்.

நோய் தடுப்புப் பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என்றார் அவர்.

இதில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) கோபாலகிருஷ்ணன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் பெ.பெரியசாமி மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல்அலுவலர்கள் பங்கேற்றனர்.

**தென் கடப்பந்தாங்கல் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்புப் பிரசாரம்**

வாலாஜா ஒன்றியம் தென்கடப்பந்தாங்கல் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பு சிறப்பு கிராம சபைக் கூட்டம் அதன் தலைவர் தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதில் தென்கடப்பந்தாங்கல் ஊராட்சிக்குள்பட்ட கிருஷ்ணாவரம் கிராமத்தில் கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வுத் துண்டு பிரசரங்களை ஊராட்சி மன்றத் தலைவர் எம்.தட்சணாமூர்த்தி தலைமையில் விநியோகம் செய்யப்பட்டது.

ஒன்றியக் குழு உறுப்பினர் ஜெ.நரசிம்மன், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் ராஜேந்திரன் மற்றும் ஊராட்சி மன்றச் செயலாளர் முத்து மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 67 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை 67.08 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,142 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீரும், வாய்க்காலில் 1,800 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 9.77 டி.எம்.சி.

**கருவலூரில் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை**

அவிநாசி கருவலூரில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகளை ஊராட்சி நிர்வாகத்தினர் புதன்கிழமை மேற்கொண்டனர் .

ஒன்றிய ஆணையாளர் பால்ராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜகோபால் ஆகியோர் மேற்பார்வையில், கருவலூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவிநாசியப்பன் தலைமையில் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் கருவலூர், நைனாம்பாளையம், காளிபாளையம், அரசுப்பம்பாளையம், மருதூர் உள்ளிட்ட பகுதிகளில் மாட்டுத் தொழுவத்தில் பிளிச்சிங் பவுடர், நோய் தடுப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டது. விவாயிகளுக்கு கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கருவலூர் கால்நடை மருத்துவர் சுசீலா, ஊராட்சி துப்புரவுப் பணியாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"மூலிகைச் சிகிச்சையில் கோமாரி நோய் குணமாகும்'**

கோமாரி நோயால் கால்நடைகளுக்கு ஏற்படும் வாய்ப் புண், கால் புண்களை மூலிகை மருத்துவ முறையில் குணப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, கோவையில் உள்ள கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் க.சிவக்குமார் வெளியிட்டுள்ள செய்தி:

கோமாரி நோய் நச்சு உயிரியால் உண்டாகும் கொடிய தொற்று நோயாகும். மாடு, ஆடு மற்றும் பன்றிகளை இது தாக்கும். நோயுற்ற கால்நடைகளின் வாயிலும், நாக்கிலும், கொப்புளங்கள் ஏற்பட்டு தீவனம் உள்கொள்ள முடியாமல் அவை மிகுந்த அவதிக்குள்ளாகும்.

மேலும், காலின் குளம்புப் பகுதியில் புண்கள் தோன்றி கால் முழுவதும் வீக்கம் காணப்படும். நோய்வாய்ப்பட்ட மாடுகளுக்கு மூலிகை மருத்துவத்தைப் பயன்படுத்தி அவற்றின் வாய்ப் புண் மற்றும் கால் புண்களை எளிதில் குணப்படுத்தலாம்.

வாய்ப் புண்ணுக்கு சிகிச்சை: சீரகம் 20 கிராம், வெந்தயம் 20 கிராம் மற்றும் மிளகு 20 கிராம் எடுத்து தண்ணீரில் ஒருமணி நேரம் ஊறவைத்து அரைக்கவும். இத்துடன் பூண்டு 4 பல், மஞ்சள் தூள் 20 கிராம் மற்றும் கருப்பட்டி 100 கிராமையும் சேர்த்து மீண்டும் விழுதாக அரைக்கவும்.

இத்துடன், ஒரு தேங்காயைத் துருவி அந்த துருவல் முழுவதையும் கலக்கவும். இக் கலவையை வாய் வழியாக கோமாரி நோய் பாதித்த மாடுகளுக்கு தினமும் இரண்டு வேளை தொடர்ந்து 5 நாள்கள் கொடுத்தால் வாய்ப் புண் எளிதில் குணமடையும்.

கால் புண்ணுக்கு சிகிச்சை: துளசி இலை 50 கிராம், மருதாணி இலை 50 கிராம், வேப்பிலை 50 கிராம், குப்பைமேனி இலை 50 கிராம், பூண்டு 10 பல் மற்றும் மஞ்சள் தூள் 10 கிராம் அனைத்தையும் கலந்து இடித்து, ஒரு லிட்டர் நல்லெண்ணெய்யுடன் கலந்து காய்ச்சவும்.

கால் புண் பாதித்த மாடுகளின் கால்களை உப்பு மற்றும் மஞ்சள் கலந்தநீரில் கழுவி, சுத்தமான உலர்ந்த துணியால் துடைத்த பிறகு, இந்த மூலிகை எண்ணெய்யை தினமும் மூன்றுவேளை தொடர்ந்து 5 நாள்களுக்கு இட்டால் கால் புண் எளிதில் குணமடையும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.11.2013**

## தேங்காய் எண்ணெய் விலை1 கிலோ ரூ.110 ஆக அதிகரிப்பு



கேரளா மற்றும் தமிழகத்தில், தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து குறைந்து போனதால், சில்லரை விற்பனையில், ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, 110 ரூபாயாக அதிகரித்து உள்ளது.

**கொப்பரை:**சந்தைக்கு, கொப்பரை வரத்து மிகவும் குறைந்து போனதையடுத்து, கேரளாவின் மொத்தவிலை சந்தையில், ஒருகுவிண்டால்தேங்காய் எண்ணெய்யின் விலை, வரலாறு காணாத அளவிற்கு, 10,300 ரூபாயாக உயர்ந்துள்ளது என, கேரளாவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுவாக, அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில், தேங்காய் உற்பத்தி குறைவாக இருக்கும். ஜனவரி மாதம் முதற்கொண்டு, தேங்காய் வரத்து அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.தமிழகம் மற்றும் கேரளாவில், ஒரு தேங்காய், 12 – 16 ரூபாய் வரை விலை போகிறது. கொச்சியில், தேங்காய்க்கு மிகவும் பற்றாக்குறை உள்ளது.

இதனால், 2 0 ரூபாய் வரை போக வாய்ப்புள்ளது என, தேங்காய் விவசாயி, கே.வி.சோமநாதன் தெரிவித்தார்.கேரளாவில்அதிகளவில்தேங்காய் உற்பத்தியாகும் வட மாவட்டங்களில், இதன் உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது. இந்நிலையில், சபரிமலை சீசன் காரணமாக, தேங்காய்க்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என, தலாக் மெக்மூத் தெரிவித்தார்.

**கிறிஸ்துமஸ்:** மேலும், கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டை ஒட்டி, தேங்காய்க்கான தேவை மிகவும் அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.முதல் தரம் கொண்ட ஒரு குவிண்டால் கொப்பரையின் விலை, 7,500 – 7,700 ரூபாய் வரை விலை போகிறது. கொப்பரையின் விலை மிகவும் அதிகமாக உள்ளதால், கேரளாவில் உள்ள எண்ணெய் உற்பத்தி ஆலைகள் செயல்பாட்டை நிறுத்தியுள்ளன. இச்சூழ்நிலையில், எண்ணெய்ப்பனை கொட்டையிலிருந்து எடுக்கப்படும், ஒரு கிலோ எண்ணெய்யின் விலை, 75 – 80 ரூபாய் என்ற அளவில் உள்ளதால், தேங்காய் எண்ணெய்யுடன், இதை கலப்படம் செய்து விற்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## வைகை அணையில் தண்ணீர் திறப்பது நிறுத்தம்

ஆண்டிபட்டி: மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்காக வைகை அணையில் திறக்கப்பட்ட நீர் நேற்று நிறுத்தப்பட்டது.பெரியாறு அணையில், இருந்து திறந்து விடப்பட்ட நீர் வைகை அணையில் தேக்கப்பட்டு, செப்டம்பர் 25 முதல் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டு வந்தது. அணையில் நீர் இருப்பை கருத்தில் கொண்டு முறைப்பாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அணையில் இருந்து திறக்கப்பட்ட நீர் நவம்பர் 3ல் நிறுத்தப்பட்டது. மீண்டும் நவம்பர் 15ல் அணை திறக்கப்பட்டு, வினாடிக்கு 1600 கன அடி வீதம் வெளியேற்றப்பட்டது. இந்நிலையில் வைகை அணைக்கான நீர் வரத்து மிகவும் குறைந்து, நேற்று வினாடிக்கு 362 கன அடியாக இருந்தது. நீர்மட்டமும் 43.08(மொத்த நீர்மட்டம் 71 அடி) அடியாக குறைந்ததால், பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீர் நேற்று நிறுத்தப்பட்டது. மதுரை, ஆண்டிபட்டி-

சேடபட்டி குடிநீருக்காக வினாடிக்கு 60 கன அடிமட்டும் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது. தற்போதுள்ள சூழலில் மழை தொடர்ந்து பெய்து, அணை நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்தால் மட்டுமே, பாசனத்திற்கு தொடர்ந்து திறந்து விட முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

### எலுமிச்சை விலை வீழ்ச்சி: வியாபாரிகள் கவலை

ஆண்டிபட்டி: எலுமிச்சை விலை வீழ்ச்சி அடைந்ததால், வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் பெரியகுளம், சோத்துப்பாறை, கும்பக்கரை, போடி மலைப்பகுதிகளில் எலுமிச்சை விளைச்சல் அதிகமாக உள்ளது. இப்பகுதியில் விளையும் எலுமிச்சை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த மாதம் கிலோ 80 முதல் 100 ரூபாய் வரை விற்கப்பட்ட எலுமிச்சை, படிப்படியாக விலை குறைந்து, தற்போது கிலோ 10 முதல் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆண்டிபட்டி எலுமிச்சை வியாபாரி அழகர்சாமி கூறியதாவது: எலுமிச்சை விளைச்சல் சராசரியாக உள்ளது. தற்போதுள்ள சீதோஷ்ண நிலையால் எலுமிச்சை பயன்பாடு குறைந்துள்ளது. இதனால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சபரிமலை சீசன் களை கட்டினால், நிலைமை சரியாகி விடும். வியாபாரிகள் பழங்களை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும்போது, போக்குவரத்து செலவு அதிகரித்து விடுகிறது. இந்த செலவை ஈடுசெய்யும்படியான விலை கிடைக்காததால், வியாபாரிகள் பாதிப்படைகின்றனர், என்றார்.

### மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் அதிகரிப்பு

தமிழகத்தில், கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு, நிலத்தடி நீர்மட்டம், 15 மாவட்டங்களில் அதிகரித்திருக்கிறது; 17 மாவட்டங்களில் குறைந்து உள்ளது.தமிழகத்தில், நிலத்தடி நீர்மட்டத்தை ஆய்வு செய்து, அதை அதிகரிக்க செய்ய, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், துவங்கப்பட்டது. இதன் மூலம், ஒவ்வொரு மாதமும், 3,238 பகுதிகளில் உள்ள, திறந்தவெளி கிணறுகள் மற்றும், 1,480 ஆழ்துளை கிணறுகள் மூலம், நிலத்தடி

நீர்மட்டம் கணக்கிடப்படுகிறது. அக்டோபர் மாத கணக்கீட்டின்படி, 17 மாவட்டங்களில், நிலத்தடி நீர்மட்டம் குறைந்துள்ளது. எனினும், 15 மாவட்டங்களில் அதிகரித்துள்ளது. ஒவ்வொரு மாத கணக்கீட்டின்படி, ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே, நிலத்தடி நீர்மட்டம் அதிகரிக்கும். ஆனால், தற்போது, 15 மாவட்டங்களில், நீர்மட்டம் அதிகரித்திருப்பது

10 குளம், 63 அணைக்கட்டு சீரமைக்க ரூ.236 கோடி ஒதுக்கீடு

தமிழகத்தில், 17 மாவட்டங்களில் உள்ள, 310 குளங்கள், 63 அணைக்கட்டுகளை சீரமைக்க, பொதுப்பணித் துறை நீர்வள நிலவள திட்டம் கீழ், 236 கோடி ரூபாய், ஒதுக்கப்பட்டு உள்ளது.தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் கீழ், தமிழகத்தில் உள்ள, அணைக்கட்டுகள், குளங்களை புனரமைத்து, நீர் கொள்ளளவை அதிகரிக்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உலக வங்கி நிதியுதவியால், இதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழக பட்ஜெட் கூட்டத்தொடரில், 'இந்த திட்டத் தின் கீழ், 17 மாவட்டங்களில் உள்ள, 310 குளங்கள், 63 அணைக்கட்டுகள், 236 கோடி ரூபாயில், சீரமைக்கப்படும்' என, முதல்வர் ஜெயலலிதா, 110 விதியின் கீழ், அறிவித்தார். சமீபத்தில், அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

### குறையும் பெரியாறு அணை நீர்மட்டம்

கூடலூர்: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், கடந்த 4 நாட்களாக மழையில்லாததால், அணை நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, அணை நீர்மட்டம், 117.10 அடியாக இருந்தது. நீர்வரத்து 710 கன அடியாகவும், நீர் திறப்பு 501 அடியாகவும் இருந்தது. நீர் இருப்பு 2105 மில்லியன் கன அடி. இதனால், அணைக்கு நீர்வரத்து குறைந்து, நீர்மட்டமும் குறைந்து வருகிறது.

### பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீர் நிறுத்தம்

தேனி : வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக திறந்து விடப்பட்ட நீர் நிறுத்தப்பட்டுள்ளது. அணைக்கு வரும் நீர்அளவு குறைந்து விட்டதாலும்,

அணையின் நீர் மட்டம் 43 அடியாக குறைந்து விட்டதாலும் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மதுரை, திண்டுக்கல் மாவட்ட பாசனத்திற்காக வைகையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## வேகமா பரவுது கோமாரி! அறிகுறிகளை அலட்சியம் செய்தால் ஆபத்து

பொள்ளாச்சி:""கோமாரி நோய் அறிகுறிகள் தெரிந்தவுடன், தாமதிக்காமல் அருகிலுள்ள கால்நடை டாக்டர்களை அணுக வேண்டும்" என, கால்நடை பராமரிப்புதுறை உதவி இயக்குனர் நாகராஜன் பேசினார்.

பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில், "கோமாரி மற்றும் டெங்கு நோய் தடுப்பு முறைகள்' குறித்த கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. தெற்கு ஒன்றிய சேர்மன் உமா மகேஸ்வரி தலைமை வகித்தார். இந்நோய்கள் குறித்து

ஊராட்சித்தலைவர்கள் மற்றும் செயலாளர்களுக்கு

விளக்கப்பட்டன. கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் நாகராஜன் பேசியதாவது: கால்நடைகளுக்கு வைரஸ் மூலம் கோமாரி நோய் பரவுகிறது. பாதிக்கப்பட்ட கால்நடைகளின் எச்சில், சாணம், பால் மற்றும் சிறுநீரில் இருந்து கிருமிகள் வெளியேறுகின்றன. நோய் தாக்கிய உடன், முதல் நாளில் காய்ச்சல் ஏற்படும். இலைதழைகளை உண்ண மறுக்கும்.

வாய் மற்றும் பால் கரக்கும் மடியில் கொப்பளங்கள் வரும். நாக்கு மற்றும் மூக்கு துவாரங்களில் கொப்பளங்கள் ஏற்படும். இந்த அறிகுறிகள் இருந்தால், உடனடியாக அருகிலுள்ள கால்நடை

மருந்தகங்களை அணுகவும். இந்த நோய் வராமல் தடுத்திட, ஆறு மாதத்துக்கு ஒருமுறை தடுப்பூசி போட வேண்டும். சினை மாடுகளுக்கும், ஆறுமாதத்திற்கு கீழ் உள்ள கன்றுக்குட்டிகளுக்கும், கோமாரி தடுப்பூசி போடலாம்.

விடுபட்ட கால்நடைகளுக்கு, அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில்

தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போதிய மருந்துகள் இருப்பில் உள்ளன.

பிற மாவட்டங்களில் இருந்து கால்நடைகளை வாங்குவதை தவிர்க்க வேண்டும். நோயுற்ற மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல், தனிமைப்படுத்த வேண்டும். மாட்டுத்தொழுவத்தில் 30 கிராம் சோடியம் கார்பனேட்டை, ஒரு பக்கெட் நீரில் கலந்து கிருமிநாசினியாக தொழுவத்தில் தெளிக்க வேண்டும். கால்நடைகளுக்கு எந்த நோய் தாக்கினாலும், கால்நடை மருத்துவர்களுக்கு உடனே தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார். தொடர்ந்து, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்து கஞ்சம்பட்டி, கோலார்பட்டி, ஜமீன் ஊத்துக்குளி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் விளக்கினர். கூட்டத்தில், தெற்கு ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சித்தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வீணாகி வரும் புட்லுார் உழவர் சந்தை

புட்லுார்:திறக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகியும், விவசாயிகள் பயன்படுத்தாததால், புட்லுார் உழவர் சந்தை வீணாகி வருகிறது.திருவள்ளூர் ஒன்றியத்துக்கு உட்பட்டது புட்லுார். இங்கு 2,500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்களின் தேவைக்காக, ரயில் நிலையம் அருகே, பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், 2010 - 2011ம் நிதியாண்டில், 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், உழவர் சந்தை அமைக்கப்பட்டது. இந்த உழவர் சந்தை, திறப்பு விழா கண்டு.இரண்டுஆண்டுகளாகியும்,விவசாயிகள், இக்கட்டடத்தை, பயன்படுத்துவது கிடையாது. இதனால், உழவர் சந்தை முழுவதும் முட்புதர்கள் வளர்ந்து புதர் மண்டி கிடக்கிறது. மேலும், கிராமத்தில் மாதந்தோறும், ரயில் நிலையம் அருகே சந்தை நடைபெற்று வருகிறது. அப்போது, அந்த பகுதி முழுவதும் போக்குவரத்து நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.

எனவே, உழவர் சந்தையை சீரமைத்து, அந்த இடத்தில், மாதந்தோறும் நடைபெறும் சந்தையை நடத்த அனுமதிக்க வேண்டும். இதனால், ஊராட்சி நிர்வாகத்திற்கு உழவர் சந்தை மூலம் வருமானம் கிடைக்கும் என, சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## மூலிகை மருத்துவ முகாம் பயனுள்ள சிகிச்சை முறை விவசாயிகள் மகிழ்ச்சி

காஞ்சிபுரம்:வேளாண் அறிவியல் நிலையத்தில், நடைபெற்ற கால்நடை மூலிகை மருத்துவ முகாமில், நோய் தாக்கிய கால்நடைகளுக்கு, மூலிகை சிகிச்சை அளிப்பது குறித்து, விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில், கலந்துகொண்ட விவசாயிகள், முகாமில் தெரிவிக்கப்பட்ட சிகிச்சை முறைகள் பயனுள்ளதாக அமைந்தது என, மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

செயல் முறை விளக்கம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், கால்நடைகள், பல்வேறு விதமான நோய் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றன.

நோய் தாக்கிய கால்நடைகளுக்கு, மூலிகை மருந்துகளால் சிகிச்சை அளிப்பது குறித்த முகாம், காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் மையத்தில்நடைபெற்றது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 80 விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு கால்நடை விரிவாக்க கல்வி இயக்குனர் சந்தரஹாசன்கலந்துகொண்டு, மூலிகை மருத்துவம் குறித்து, விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து உரைத்தார்.

பின்னர், இருளர் பழங்குடியினத்தவர் பின்பற்றும் மூலிகை மருத்துவ நோய் தடுப்பு முறை குறித்து, இருளர் பெண்கள் பழங்குடி நல மைய இயக்குனர் ராஜேந்திரன் விரிவாக பேசினார்.

பின்னர், மூலிகை சிகிச்சை எவ்வாறு அளிப்பது என, தஞ்சாவூர் கால்நடை பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் புண்ணியமூர்த்தி, விவசாயிகளுக்கு செயல்முறைவிளக்கம் அளித்தார்.

இதற்காக, தண்டரை பகுதியில் உள்ள மூலிகை பண்ணையில் இருந்து, மூலிகைகள் கொண்டு வரப்பட்டன.

கூட்ட அரங்கத்திலேயே கிரைண்டர் மூலம், மூலிகைகளை அரைத்தல் மற்றும்

நோய் தாக்கிய கால்நடைகளுக்கு மூலிகை மருந்தை பயன்படுத்தும் முறை குறித்து, தெளிவுபடுத்தப்பட்டது.

கரியச்சேரியை சேர்ந்த சபிதாராணி கூறுகையில், "கால்நடை வளர்ப்பவர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருந்தது," என்றார்.

அனைத்து பகுதியிலும்...

பிள்ளையார்பாளையம், பலாஜி கூறுகையில், "சிகிச்சை முறைகளினால், கால்நடைகள் நோய் தாக்குதலில் இருந்து, மீண்டு புத்துணர்வுடன் வளர்வதற்கு உதவியாக இருக்கும்," என்றார்.

சாத்தனஞ்சேரி தனபால் கூறுகையில், "மூலிகை மருத்துவ முகாம், மாவட்டத்தின் அனைத்து கிராம பகுதிகளிலும் நடத்த, வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

## 200 கரும்பு விவசாயிகளுக்கு ரூ.4.79 கோடி ஆலை நிர்வாகம் வழங்கல்

தணி:கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பு ஓட்டிய, 200 விவசாயிகளுக்கு, முதற்கட்டமாக, 4.79 கோடி ரூபாய்க்கான காசோலைகளை, ஆலை நிர்வாகம் வழங்கியது.

திருவாலங்காட்டில் உள்ள, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 11 ஆயிரம் கரும்பு விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். அரசு, ஒரு டன் கரும்புக்கு, 2,250 ரூபாய் வழங்கி வருகிறது.

கடந்த மாதம், 4ம் தேதி முதல், அக்.,15ம் தேதி வரை, 200 விவசாயிகள், 83 ஆயிரம் டன் கரும்பு, ஆலைக்கு ஓட்டினர். இதையடுத்து, முதற்கட்டமாக, ஆலைக்கு கரும்பு ஓட்டிய, 200 விவசாயிகளுக்கு உண்டான காசோலை வழங்கும் விழா ஆலைய வளாகத்தில் நடந்தது.

இதில், ஆலைய நிர்வாக மேலாண்மை இயக்குனர் மலர்விழி, தலைவர் எத்திராஜ் ஆகியோர் கலந்து கொண்டு, மொத்தம், 4.79 கோடி ரூபாய்க்கான காசோலைகள்

விவசாயிகளுக்கு வழங்கினர்.

இதுகுறித்து, ஆலைய மேலாண்மை இயக்குனர் மலர்விழி கூறுகையில், 'இதுவரை பதிவு செய்யாத கரும்பு விவசாயிகள், புதியதாக பதிவு செய்து, கரும்புகளை ஆலைக்கு அனுப்பலாம்.

கடந்த ஆண்டு, கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு நிர்வாகம் செலுத்த வேண்டிய நிலுவை தொகை எதுவும் இல்லை. மாறாக, இந்தாண்டு ஓட்டிய கரும்புக்கு ஒரு மாதத்திலேயே, விவசாயிகளுக்கு உண்டான தொகையை கொடுத்து வருகிறோம். கரும்பு ஓட்டிய, 25 நாள் அல்லது ஒன்றரை மாதத்தில் அவர்களுக்கு சேரவேண்டிய தொகை உடனடியாக வழங்கப்படும்.

அக்.16ம் தேதி முதல், 22ம் தேதி வரை கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு, உண்டான, 3.58 கோடி ரூபாய், அடுத்த மாதம் (டிசம்பர்) முதல் வாரத்தில் வழங்கப்படும்' என்றார்.

## தச்சூர் பகுதியில் சாகுபடி செய்த மக்காசோளம் அறுவடைக்கு தயார்

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதி யில் சாகுபடி செய்த மக்காச் சோளம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

கள்ளக்குறிச்சி மற்றும் சுற்றுப் பகுதியில் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனம் மூலம் மக்காசோளம் பயிர் செய்யப்படுகிறது.

தண்ணீர் பற்றாக்குறை ஏற்படு வதற்குள் அறுவடைக்கு தயாராவதால் மக்காசோளம் பயிர் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டினர்.

கள்ளக்குறிச்சி

அடுத்த தச்சூர், விளம்பார், பொற்படாக்குறிச்சி, உலங்காத்தான் காட்டுகொட்டாய் உட்பட பல பகுதிகளில் மூன்று மாதங்களுக்கு முன்பு அதிகளவில் மக்காசோளம் பயிரிடப்பட்டன.

இது செழித்து வளர்ந்து கதிர்விட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். தச்சூர், பொற்படாக் குறிச்சி பகுதியில் சாகுபடி செய்துள்ள மக்கசோளம் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. கடந்தாண்டு கள்ளக்குறிச்சி, சின்னசேலம் மார்க்கெட் கமிட்டியில் 1,000 முதல் 1,400 ரூபாய் வரை விலை போனது.

## விவசாயிகளுக்கான பிரச்சார வாகனம் பெரம்பலூர் கலெக்டர் துவக்கிவைப்பு

பெரம்பலூர்: வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் பிரச்சார வாகனத்தை கலெக்டர் தரேஷ்அஹமது கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கும், குறைந்த செலவில் விளைபொருட்களை கிடங்குகளில் வைத்து பாதுகாப்பதற்கும் வோண்மைத்துறையின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் பொருட்களை விற்பனை செய்வதால் விவசாயிகளுக்கு ஏற்படக்சுடிய நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த பிரச்சார வாகனம் துவக்கப்பட்டுள்ளது.

இன்று (நேற்று) முதல் டிச., 7ம் தேதி வரை (சனி மற்றும் நீங்கலாக) இந்த பிரச்சார வாகனம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளது.

பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி, மக்காசோளம், கம்பு, நெல்,மிளகாய் மல்லி, எள் மற்றும் நிலக்கடலை போன்ற விளைபொருட்கள் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்ல விலைக்கு விற்பனை செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏலத்தில் வெளி மாவட்ட வியாபாரிகள் கலந்து கொள்ள உள்ளனர். இதை விவசாய மக்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இங்கு விவசாயிகளுக்கு கமிஷன் மற்றும் தரகு கிடையாது, சரியான எடை, மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை கிடைப்பதற்கான வசதி, விளைப்பொருட்களை ஊரக கிடங்குகளில் இருப்பு வைத்து ரூ.2 லட்சம் பொருளீட்டுக்கடன் பெறுவதற்கான வசதி உள்ளிட்ட பயன்கள் கிடைக்கும்.

உழவர் நலத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்டிற்கு ஒரு டன் விளைபொருள் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் விற்பனை செய்யும் விவசாயிக்கு ரூ.1 லட்சம் வரை இலவச காப்பீடு செய்து தரப்படும்.

செட்டிக்குளத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.1.14 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும், 50 மெட்ரிக் டன் கொள்ளவு உள்ள வெங்காய குளிர்பதன சேமிப்பு கிடங்கு கட்டப்படுகிறது.

எளம்பலூர் காந்தி நகரில், 32 லட்சம் ரூபாயில், 25 மெட்ரிக் டன் கொள்ளவு உள்ள தானிய குளிர்பதன கிடங்கும், அதேபகுதியில் ஒரு கோடியே, 20 லட்சம் ரூபாயில் தானிய சேமிப்பு கிடங்கும் கட்டப்பட்டு வருகிறது. இந்த கிடங்குகளுக்கான கட்டிடப்பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு வரும் போது விவசாயிகளுக்கு மேலும் பயனுள்ள வகையில் அமையும்.

எனவே, விவசாயிகள் தங்களின் உற்பத்தி பொருட்களை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் விற்பனை செய்து பயன் பெற வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

## *சிறு, குறு விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனம் அமைக்க மானியம்: கலெக்டர்*

தஞ்சாவூர்: தஞ்சை கலெக்டர் சுப்பையன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கரும்பு, தென்னை இதர பயிர்களில் நுண்ணீர் பாசனம் அமைப்பதால், வாய்க்கால் மூலம் நீர்ப்பாசனம் செய்யும்போது நீர் ஆவியாதல் மற்றும் மண்ணிலுள்ள

நுண்துளைகள் மூலம் நீர் உள் செல்லுதல் ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு தவிர்க்கப்படும்.

எனவே, கூடுதலான பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்யவும் முடியும். சொட்டு நீர்ப்பாசனம் மூலம் உரங்களையும் பயிருக்கு செலுத்தலாம். இதன்மூலம் உரங்கள் வீணாவது தவிர்க்கப்பட்டு, பயிருக்கு உடனடியாக கிடைப்பதால் மகசூல் அதிகரிக்கும். நுண்ணீர் பாசனம் அமைக்க சிறு மற்றும் குழு விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியமும், பிற விவசாயிகளுக்கு, 75 சதவீதம் மானியமும் வழங்கப்படும். தஞ்சை மாவட்டத்துக்கு நடப்பாண்டுக்கு, 580 ஹெக்டர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, கரும்பு, தென்னை மற்றும் இதர பயிர்களில் நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை அலுவலரை அணுகி பயன்பெறலாம்.

நுண்ணீர் பாசனம் அமைக்க குடும்ப அட்டை நகல், கம்ப்யூட்டர் சிட்டா, பிற விவசாயியிடம் இருந்து குத்தகையாக இருந்தால், 10 ஆண்டுக்கான ஒப்பந்த பத்திரம், அடங்கல், தாசில்தாரிடம் இருந்து பெறப்பட்ட சிறு, குறு விவசாயி சான்று, மண் மற்றும் நீர்ப்பரிசோதனை முடிவு விபரம், மின் இணைப்பு அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குனரிடம் இருந்து விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

## 1,000 டன் குறுவை நெல் ரயில் மூலம் அனுப்பிவைப்பு

கும்பகோணம்: கும்பகோணத்தில் இருந்து 1,000 டன் குறுவை நெல் சென்னைக்கு ரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. தமிழக அரசு குறுவை நெல்லை விவசாயிகள் விற்பனை செய்ய ஏதுவாக கும்பகோணம் மண்டலத்தில் பாபநாசம் தாலுகாவில், 24 இடங்களிலும், திருவிடைமருதூர் தாலுகாவில், 19 இடங்களிலும், கும்பகோணம் தாலுகாவில், 17 இடங்கள் உள்பட, 60 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. இந்த கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடம் இருந்து வாங்கப்படும் நெல் மூட்டைகள் கொத்தங்குடி, திருநாகேஸ்வரம் ஆகிய இடங்களில் உள்ள திறந்தவெளி சேமிப்பு கிடங்கு, திருநாகேஸ்வரம் நவீன அரிசி ஆலை ஆகிய இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தினர் இருப்பு

வைத்துள்ளனர். இந்நிலையில் இருப்பு வைக்கப்பட்ட குறுவை நெல் மூட்டைகளை வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி அங்குள்ள நவீன அரிசி ஆலைகளில் அரிசியாக்கி பொதுவினியோகத்திட்டத்திற்கு பயன்பாடுமாறு நுகர்பொருள் வாணிப கழகத்தினர் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

அதன்படி, கும்பகோணம் பகுதியில் இதுவரை குறுவை மூலம் கொள்முதல் செய்யப்பட்ட, 8,335 டன் நெல்லில், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு கடந்த, 5ம் தேதி, 29 ரயில் வேகன்களில், 1,218 டன் நெல் மூட்டைகள் அனுப்பப்பட்டது. அதேபோல், கடந்த மாதம், 29ம் தேதி, 1,168 டன் குறுவை நெல் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டுக்கு அனுப்பப்பட்டது. நேற்று கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து, 1,000 டன் நெல் மூட்டை சென்னைக்கு, 21 ரயில் வேகன்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

""வெளிமாவட்டங்களுக்கு தேவைப்படும் இடங்களுக்கு குறுவை நெல் அனுப்பி வைக்கப்படும்," என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரூ.160 கோடி வழங்க இலக்கு தஞ்சையில் விவசாயிகளுக்கு பயிர் கடன்

தஞ்சாவூர்: "தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சி மேம்படும் வகையில், நடப்பாண்டு பயிர்க்கடன் வழங்க, 160 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது' என, கலெக்டர் சுப்பையன் கூறினார்.

தஞ்சையில், மாவட்ட கூட்டுறவுத்துறை சார்பில் கூட்டுறவு வார விழா நடந்தது. இதில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சுப்பிரமணியன் வரவேற்றார். தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் துரை திருஞானம் விளக்க உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்து, ஒரு கோடியே ஐந்து லட்சம் ரூபாய் மதிப்பில் நலயுதவிகளை வழங்கினார். 15 கூட்டுறவு சங்கங்களுக்கு விருதுகள், கூட்டுறவுத்துறை மூலம் நடத்திய பல்வேறு போட்டிகளில் வென்ற மாணவ, மாணவியருக்கு பரிசு, கூட்டுறவு நிறுவனங்களில் சிறந்த பணியாற்றிய நிறுவனங்களுக்கு பரிசு ஆகியவற்றை கலெக்டர் வழங்கினார்.

தொடர்ந்து, கலெக்டர் சுப்பையன் பேசியதாவது:
தஞ்சை மாவட்ட விவசாயிகள் பொருளாதார வளர்ச்சிக்காக, மாவட்டத்துக்கு நடப்பாண்டு, 160 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், இதுவரை 113 கோடியே, 50 லட்சம் ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது.
தஞ்சை மாவட்டத்தில், மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராமப்புறங்களிலுள்ள தொடக்க கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் பெறும் வகையில், நகைக்கடன் வழங்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகள், விவசாய பொருட்களை பாதுகாப்பாக, வைத்திருந்து, தேவையான சமயங்களில் நல்ல விலைக்கு விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அதன்படி, 60 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ஆறு கோடியே, 60 லட்சம் ரூபாயில், 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தானியங்கி கிடங்கு நபார்டு நிதியுதவி திட்டத்தில், கட்டி தரப்பட்டுள்ளது.
இவ்வாறு, அவர் பேசினார்.
இந்நிகழ்ச்சியில், மாவட்ட பஞ்., தலைவர் அமுதா, நகராட்சி தலைவர் சாவித்திரி, கூட்டுறவு ஒன்றிய தலைவர் பாரதிமோகன், கயிறு வாரிய தலைவர் நீலகண்டன், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர் பண்டரிநாதன், பாபநாசம் கூட்டுறவு நகர வங்கி தலைவர் நாகையன் உள்பட பலர் பங்கேற்றனர்.கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் ஜீவா நன்றி கூறினார்.

**பாரம்பரிய நெல் சாகுபடி விளக்க பயிற்சி முகாம்**

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பாரம்பரிய நெல் சாகுபடி குறித்து விளக்க பயிற்சி முகாம் நடந்தது. புதுச்சேரி மாநில இயற்கை வேளாண் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். கிரியேட் ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் வரவேற்றார்.
இதைத்தொடர்ந்து, "நமது நெல்லை காப்போம்' அமைப்பு மாநில

ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் பேசியதாவது:

இதற்கு முன் மாதக்கணக்கில் இரவு-பகலாக மழை பெய்துள்ளது. வெள்ளம், புயல் என, இயற்கை சீற்றங்களில் பாரம்பரிய நெல் ரகம் அழியாமல், மகசூல் தந்துள்ளது. இயற்கை வேளாண் தொழில்நுட்ப நெல் ரகங்கள் இயற்கை சீற்றத்துக்கு தாக்கு பிடிக்காமல், பூச்சி தாக்குதலில் பயிருக்கு எதிர்ப்பு சக்தி போதாமல் பயிர் சேதமடைவதில் பாதுகாக்க உதவுகிறது. தற்போது உணவே விஷம் என்னும் நிலை ஏற்பட்டு, நோய் தாக்குதலுக்கு மனிதர்கள் ஆளாகியுள்ளனர். இந்நிலையில் இருந்து மீள, பாரம்பரிய நெல் மற்றும் சிறுதானியங்களை நாம் உணவாக உட்கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்

**மீன் ஏல கூடம் அமைக்க அதிகாரிகள் நேரில் ஆய்வு**

வேதாரண்யம்: வேதாரண்யம் அருகே கோடியக்கரையில், 45 லட்சம் ரூபாய் மதிப்பில் மீன் ஏலக்கூடம் அமைப்பதற்கான இடத்தை வருவாய்த்துறை அதிகாரிகள் பார்வையிட்டு, ஆய்வு நடத்தினர்.

வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் ராமேஸ்வரம், தூத்துக்குடி, ராமநாதபுரம், கீழவைப்பார் மற்றும் நாகை மாவட்டத்துக்கு உள்பட்ட தரங்கம்பாடி, சந்திரபாடி, பெருமாள்பேட்டை, புதுப்பேட்டை பகுதியை சேர்ந்த மீனவர் கிராமங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களை தவிர, இரண்டாயிரம் பேர் உள்ளூர் மீனவர்களும் தங்கி, மீன்பிடிக்கின்றனர். 400க்கும் மேற்பட்ட பைபர் படகுகளில் பிடித்து வரும் மீன்களை கோடியக்கரை கடற்கரையில் ஏலமிட, கூடம் இன்றி சிரமப்பட்டு வந்தனர்.

கோடியக்கரை சித்தர் கட்டம் கடற்கரை பகுதியில், சுனாமிக்கு பிந்திய மறுவாழ்வு திட்டத்தில், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி, 45 லட்சம் ரூபாய் மதிப்பில் மீன் ஏல கூடம் கட்ட தேர்வு செய்யப்பட்டது.ஏலக்கூட தேர்வு பணியை வேதை தாசில்தார் ராம்குமார், மண்டல துணை தாசில்தார் துரைக்கண்ணன் ஆகியோர் மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**கோமாரி நோய்க்கு 7 மாடுகள் பலி**

தேனி :தேனி, திருப்புவனம் பகுதிகளில் கோமாரி நோய் தாக்கி, ஏழுமாடுகள் பலியாகியுள்ளன.

தமிழகத்தின் பல பகுதிகளில், கோமாரி நோய் தாக்குதலால் கால்நடைகள் பலியாகி உள்ளன. தேனி மாவட்டம், வீரபாண்டி அருகே உள்ள உப்பார்பட்டியை சேர்ந்தவர் பிச்சை. இவரது மாடு ஒன்று, இரண்டு நாட்களாக தீவனம் சாப்பிடாமல் இருந்துள்ளது. நேற்று முன் தினம் அந்த மாடு இறந்தது. தாய் மாடு இறப்பதற்கு முன், பால் குடித்து வந்த கன்றுக் குட்டியும் இறந்து விட்டது.

தகவல் அறிந்த கால்நடைதுறையினர், இறந்த மாடுகளை பரிசோதனைக்கு பின் ஊருக்கு தொலைவில், பாதுகாப்பானமுறையில் அடக்கம் செய்தனர். சில நாட்களுக்கு முன்பு, இதே போல் கோட்டை என்பவரின் மாடும்இறந்துள்ளது. அவர் கால்நடை டாக்டர்களுக்கு தகவல்

சொல்லமால், புதைத்து விட்டார்.தேனி மாவட்டத்தில், கோமாரி நோய்க்கு மூன்று மாடுகள் பலியாகியுள்ளன. மண்டல கால்நடைதுறை இணை இயக்குனர் பாலகிருஷ்ணன் கூறுகையில், "தடுப்பூசி போடாத கால்நடைகளைகண்டறிந்து, தடுப்பூசி போட்டு வருகிறோம். கோமாரி நோய் வந்தால் கால்நடைகளின் வாயில் புண்

ஏற்படும்.இதனால், தீவனம் சாப்பிடாமல் இருக்கும். கால்நடை வளர்ப்போர், கம்மங்கூழ், வாழைப்பழம்

உள்ளிட்ட நாட்டு மருந்துகளை கலந்து, வலுக்கட்டாயமாக

கொடுக்கின்றனர். இதனால்,மேலும் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது. நோய் தென்பட்டால் உடனடியாக

அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையை தொடர்பு கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும்,'

என்றார்.

திருப்புவனம்: சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பகுதியில் கோமாரி நோய் தாக்குதல் தீவிரம் அடைந்துள்ளது. கால்நடைத்துறை மூலம் தடுப்பு நடவடிக்கை

மேற்கொள்ளப்படுகிறது. இருப்பினும் திருப்புவனம் அருகே அல்லிநகரம், எம்.ஜி.ஆர்., நகர், பழையூர், கழுகேர்கடை பகுதியில் நோய் தாக்கி 4 மாடுகள் இறந்துள்ளது. கால்நடைகளுக்கு கோமாரி நோய் தீவிரமாய் பரவுவதை தடுக்க, வாரச்சந்தைகளில் ஆடு, மாடுகளை கொண்டுவர தடை விதிக்கப்பட்டு உள்ளது. திருப்புவனம் பேரூராட்சி வாரச்சந்தைக்கு, நவ. 26 முதல் டிச. 30 வரை ஆடு, மாடுகளை கொண்டுவர, செயல் அலுவலர் முனியாண்டி தடை விதித்துள்ளார்.

**எலுமிச்சை விலை வீழ்ச்சி வியாபாரிகள் கவலை**

ஆண்டிபட்டி : எலுமிச்சை விலை வீழ்ச்சி அடைந்ததால், வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் பெரியகுளம், சோத்துப்பாறை, கும்பக்கரை, போடி மலைப்பகுதிகளில் எலுமிச்சை விளைச்சல் அதிகமாக உள்ளது. இப்பகுதியில் விளையும் எலுமிச்சை மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

கடந்த மாதம் கிலோ 80 முதல் 100 ரூபாய் வரை விற்கப்பட்ட எலுமிச்சை, படிப்படியாக விலை குறைந்து, தற்போது கிலோ 10 முதல் 20 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆண்டிபட்டி எலுமிச்சை வியாபாரி அழகர்சாமி கூறியதாவது: எலுமிச்சை விளைச்சல் சராசரியாக உள்ளது. தற்போதுள்ள சீதோஷ்ண நிலையால் எலுமிச்சை பயன்பாடு குறைந்துள்ளது. இதனால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சபரிமலை சீசன் களை கட்டினால், நிலைமை சரியாகி விடும். வியாபாரிகள் பழங்களை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும்போது, போக்குவரத்து செலவு அதிகரித்து விடுகிறது.

இந்த செலவை ஈடுசெய்யும்படியான விலை கிடைக்காததால், வியாபாரிகள் பாதிப்படைகின்றனர்,என்றார்

**வைகை அணையில் தண்ணீர் திறப்பது நிறுத்தம**

ஆண்டிபட்டி : மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்காக வைகை அணையில் திறக்கப்பட்ட நீர் நேற்று நிறுத்தப்பட்டது. பெரியாறு அணையில், இருந்து திறந்து விடப்பட்ட நீர் வைகை அணையில் தேக்கப்பட்டு, செப்டம்பர் 25 முதல் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டு வந்தது. அணையில் நீர் இருப்பை கருத்தில் கொண்டு முறைப்பாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அணையில் இருந்து திறக்கப்பட்ட நீர் நவம்பர் 3ல் நிறுத்தப்பட்டது. மீண்டும் நவம்பர் 15ல் அணை திறக்கப்பட்டு, வினாடிக்கு 1600 கன அடி வீதம் வெளியேற்றப்பட்டது. இந்நிலையில் வைகை அணைக்கான நீர் வரத்து மிகவும் குறைந்து, நேற்று வினாடிக்கு 362 கன அடியாக இருந்தது. நீர்மட்டமும் 43.08(மொத்த நீர்மட்டம் 71 அடி) அடியாக குறைந்ததால், பாசனத்திற்கு திறக்கப்பட்ட நீர் நேற்று நிறுத்தப்பட்டது. மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக வினாடிக்கு 60 கன அடிமட்டும் தொடர்ந்து வெளியேற்றப்படுகிறது. தற்போதுள்ள சூழலில் மழை தொடர்ந்து பெய்து, அணை நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்தால் மட்டுமே, பாசனத்திற்கு தொடர்ந்து திறந்து விட முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

**விதை எள்ளுக்கு கிராக்கி கிலோ ரூ.140க்கு விற்பனை**

ஆர்.எஸ்.மங்கலம் : பருவமழை ஏமாற்றியதால், திருவாடானை தாலுகாவிற்கு உட்பட்ட ஆனந்தூர், உப்பூர், சேத்திடல், செங்குடி, ஆர்.எஸ்.மங்கலம், புல்லமடை உட்பட பல பகுதிகளில் நெல்பயிர்களை உழவு செய்து விட்டு, எள் விதைப்பும் செய்து வருவதால், விதை எள்ளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.சாதாரண நாட்களில் கிலோ ரூ.70க்கு விற்ற விதை எள், தற்போது 140க்கு விற்கப்படுகிறது. பல பகுதிகளிலும் வறட்சியால் நெல் பயிர்கள் கருகிவருவதால் லேசான ஈரப்பதத்தை மட்டுமே கொண்டு விளையக்கூடிய எள் விதைப்பை விவசாயிகள் அதிகம் தேர்வு செய்யும் பட்சத்தில், இதன் விலை, மேலும் அதிகரிக்கும் என, வியாபாரிகள் தெரி வித்தனர்.

**வெள்ள பாதிப்பை தடுக்க நடவடிக்கை கலெக்டர்களுக்கு தமிழக அரசு உத்தரவு**

விருதுநகர் : மழை, வெள்ளத்தில் சிக்குவோரை மீட்டு, வேண்டிய உதவிகளை செய்ய , அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும், தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை துவங்கிவிட்டாலும், அது தீவிரமடையாமல் உள்ளது.முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பாதிக்கப்படுவோரை, தங்க வைப்பதற்காக திருமண மண்டபங்கள், சமுதாய கூடங்களை தயார் நிலையில் வைத்திருக்க, அனைத்து கலெக்டர்களுக்கும் அரசு உத்தரவிட்டு உள்ளது.மாவட்ட வாரியாக, கடந்த ஆண்டுகளில் வடகிழக்கு பருவமழை பெய்தபோது, வெள்ளத்தால் பாதித்த பகுதிகளின் விபரம் தயாரிக்கப்பட்டுள்ளது.
இதனடிப்படையில், அப்பகுதிகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டால், மக்களுக்கு உதவ, அருகில் உள்ள ரேஷன்கடைகளில், கார்டுகளின் எண்ணிக்கை அடிப்படையில், ஒருமாதத்திற்கு
தேவையான அத்தியாவசியப்பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதை, மாவட்ட வழங்கல்
அதிகாரிகள் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

## 3 மாவட்டங் 3 மாவட்டங்களில் பறவைகள் கணக்கெடுப்பு 24ம் தேதி ஆரம்பம்களில் பறவைகள் கணக்கெடுப்பு 24ம் தேதி ஆரம்பம்

திருநெல்வேலி: நெல்லை, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்ட பகுதிகளில் பறவைகள் கணக்கெடுப்பு வரும் 24ம் தேதி ஆரம்பமாகிறது.
நெல்லை மாவட்டத்தில் ராஜவல்லிபுரம், வாகைகுளம், பிராஞ்சேரி குளம், கூந்தன் குளம் காடன் குளம், அரியகுளம், திருப்புடைமருதூர் குளம், பருத்திவைகுளம், சாரல் குளம், நயினார் குளம், வடக்கு விஜயநாராயணம் குளங்களில் இந்த கணக்கெடுப்பு நடக்கிறது,தூத்துக்குடி மாவட்டத்தில் வடக்கு கால்வாய், வேப்லோடை வேம்பார் கால்வாய், பெருங்குளும், கருங்குளம், கடம்பன்குளம் ஆகிய இடங்களிலும், குமரி மாவட்டத்தில் சுசீந்திரம் தேரூர், உப்பளம், மணக்குடி, ராஜாக்கமங்கலம் ஆகிய குளங்களிலும் இக்கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.
ஒவ்வொரு மாதமும் 4வது ஞாயிற்று கிழமை இந்த கணக்கெடுப்பு நடக்கிறது. 24ம்

தேதி ஆரம்பமாகும் இக்கணக்கெடுப்பு வரும் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிவடைகிறது.

மூன்று மாவட்டங்களில் பறவைகள் கணக்கெடுப்பு குறித்த பயிற்சி வரும் 23ம் தேதி நெல்லை அல்லது கன்னியாகுமரியில் நடத்தப்படுகிறது. இக்கணக்கெடுப்பு பணியில் ஆர்வமுடையவர்கள் தலைமையிட உதவி வன பாதுகாவலர் (94454 68560), நெல்லை வன அலுவலக தொழில் நுட்ப உதவியாளர் (94437 92394) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

இதற்கான ஏற்பாடுகளை மண்டல வன பாதுகாவலர் ராகேஷ்குமார் டோக்ரா தலைமையில் மாவட்ட வன அலுவலர்கள் ரிக்டோ சிறியாக் (குமரி), பத்மா (நெல்லை), செண்பகமூர்த்தி (தூத்துக்குடி) மற்றும் அதிகாரிகள் செய்துள்ளனர்.

**மரக்கன்றுநடும் விழா**

களக்காடு: களக்காடு மீரானியா பள்ளி தேசிய மாணவர் படை சார்பில் மரக்கன்று நடும் விழா நடந்தது.

பள்ளி வளாகத்தில் நடந்த விழாவிற்கு சுகம் ஆஸ்பத்திரி டாக்டர் ஆதம் சேக் அலி தலைமை வகித்து முதல் மரக்கன்று நட்டு துவக்கி வைத்தார். பள்ளி தாளாளர் முகம்மதுஷாபி முன்னிலை வகித்தார்.பள்ளியை சுற்றிலும் 30 மரக்கன்றுகள் நடப்பட்டன. மரக்கன்றுகளை பராமரிக்க பள்ளி நிர்வாகம் மாணவர்கள் அடங்கிய குழு ஒன்றையும் அமைத்துள்ளது. பள்ளி தலைமையாசிரியர் யாகத் அலிகான், தேசிய மாணவர் படை கமாண்டர் அனில்குமார், ஏ.என்.ஒ.ஐயப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

செங்கோட்டை: மூன்றுவாய்க்கால் கிராமத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது.

செங்கோட்டை பஞ்., யூனியன் மூன்று வாய்க்கால் கிராமததில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. புதூர் டவுன் பஞ்., தலைவி ராதா தலைமை வகித்து துவக்கி வைத்தார். முகாமில் கால்நடைகளுக்கு புளியரை கால்நடை உதவி

மருத்துவர் ஜெயபால் ராஜா தலைமையிலான மருத்துவ குழுவினர் கோமாரிநோய் தடுப்பூசி, கோழி கழிச்சல் தடுப்பூசி, குடற்புழுநீக்கம், சினை பரிசோதனை, செயற்கைமுறை கருவூட்டல் போன்றவற்றை மேற்கொண்டனர். முகாமில் 743 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.சிறந்த கிடேரி கன்றுகளுக்கு புதூர் டவுன் பஞ்., தலைவி ராதா பரிசுகள் வழங்கினார்.

## இரண்டு ஆண்டுகளாக தொடரும் வறட்சி : திருப்புத்தூரில் குறைந்து வரும் நிலத்தடிநீர்

திருப்புத்தூர் :திருப்புத்தூரில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடரும் வறட்சியால் விவசாயம் சரிந்து வருகிறது.விவசாயம் தொடர நிரந்தர நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்புத்தூர் வட்டாரத்தில் விவசாயம் தென்மேற்கு,வடகிழக்கு பருவமழையை நம்பியே உள்ளது.கடந்தாண்டு,மழையை நம்பி, விவசாயிகள்,சுமார் 13 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்தனர்.சராசரி அளவான 850 மி.மீ.க்கும் குறைவாக 728 மி.மீ. மழையே பெய்தது. அறுவடையில்"சாவி'யையே விவசாயிகளால் அறுக்க முடிந்தது. இந்தாண்டு, எச்சரிக்கையாக "மழை பெய்தால் விவசாயம் ' என்று விவசாயிகள் காத்திருந்தனர். ஆடிப்
பட்டத்தில், சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்தனர். தீபாவளி நேர மழையை நம்பி, சுமார் 25 ஏக்கரில் நாற்றுப்பாவி இருந்தவர்களும் நட முடியாமல் தவிக்கின்றனர்.
பருவமழை, சராசரியான 375 மி.மீ .,ஐ விட குறைந்தே பெய்தது. தற்போது அக்டோபரில் துவங்கிய வடகிழக்கு பருவ மழையும், கடந்த 2 மாதங்களில் சாராசரியாக 326
மி.மீ.க்குப் பதிலாக, இதுவரை 77 மி.மீ.மழையே பெய்துள்ளது. திருப்புத்தூர் பகுதியில், கடந்த இரண்டு வாரங்களாக,வானம் இருண்டு, மேகம் கருத்திருந்தாலும், மழையே பெய்ய வில்லை.
இரண்டு பருவமழையும் விவசாயிகளை ஏமாற்றி விட்டது.
திண்டுக்கல்,புதுக்கோட்டை,மதுரை போன்ற பக்கத்து மாவட்டங்களில் பெய்யும்

மழையால், மணிமுத்தாறு,விருசுழியாறு,பாலாறுகளில் ஏற்படும் நீர்வரத்தும் கடந்த சில ஆண்டுகளாக முற்றிலுமாக இல்லை. இதனால், இப்பகுதி கண்மாய்கள் பலவும் வறண்டு விட்டன.பயிர்கள் கருகி வருகின்றன. நாற்றுகள் நடமுடியாமல் கருகுகின்றன. விவசாயிகள் தங்கள் சாகுபடிக்கு செலவழித்த பணத்தை இழந்து தவிக்கின்றனர்.கிணற்றுப்பாசனத்தை நம்பி தற்போது நடைபெறும் 1500 ஏக்கர் சாகுபடியும் தற்போது குறைந்து வரும் நிலத்தடி நீரால் கேள்விக்குறியாகி விட்டது. திருப்புத்தூர் வட்டாரத்தில்,விவசாயம் குறைவதால், பலர் வெளி இடங்களுக்கு கூலி வேலைக்கு செல்வது அதிகரிக்க துவங்கியுள்ளது. வழக்கமான விதை விற் பனையிலும் பெரும் சரிவு ஏற் பட்டுள்ளது.இதனைத் தவிர்க்க, குறைந்த பாசனத்தில் விளையும், சிறுதானியங்களை சாகுபடி செய்ய வேளாண்மைத்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்

**மானியத்தில் விவசாய கருவி ரூ.1.25 கோடி ஒதுக்கீடு**

சிவகங்கை : ""விவசாயிகளுக்கு மானிய விலையில், விவசாய கருவிகள் வழங்கப்படும்," என, விவசாய பொறியியல் துறை செயற்பொறியாளர் ராஜகோபால் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: மாவட்டத்தில், விவசாய பொறியியல் துறை மூலம், தேசிய விவசாய அபி

விருத்தி திட்டத்தின் கீழ், 2013- 14ம்

ஆண்டிற்கு, விவசாயிகளுக்கு, 30 முதல் 50 சதவீத மானியத்தில், விவசாய கருவிகள் வழங்கப்படும். இதற்காக, அரசு ரூ.1.25 கோடியை ஒதுக்கியுள்ளது.விவ சாயிகள், பவர் டில்லர், களையெடுக்கும் கருவி, ரோட்டாவேட்டர், மோட்டார் பிளேட், உருளை விதைப்பான்உள்ளிட்ட கருவிகள் வழங்கப்படும்.வாங்க விரும்பும் விவசாயிகள், கருவியின் விலைப்புள்ளி, நில சிட்டா அடங்கல், ரேஷன் கார்டு நகல், போட்டோ ஆவணங்களுடன், சிவகங்கை வருவாய் கோட்டத்தை சேர்ந்தவர்கள், சிவகங்கை, தொண்டி ரோட்டில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை (04575 - 240 288) தொடர்பு கொள்ளலாம். தேவகோட்டை வருவாய் கோட்டத்தை சார்ந்தவர்கள், காரைக்குடி, சுப்பிரமணியபுரம் 9வது

வீதியில் உள்ள உதவி செயற்பொறியாளர் (99422 83830) அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். மேலும் விபரம் வேண்டுவோர், சிவகங்கை, கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள, விவசாய பொறி
யியல் துறை செயற்பொறியாளர்அலுவலகத்தை (04565 - 240 213) தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**கோமாரி நோய் தாக்கி மாடுகள் பலியாகும் பரிதாபம் : மோகனூர் பகுதி விவசாயிகள் பெரும் பீதி**

நாமக்கல்: கோமாரி நோய் தாக்கி, அடுத்தடுத்து இரண்டு மாடுகள் பலியாகியது. அதனால், மோகனூர் பகுதியில், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரும் பீதியடைந்துள்ளனர்.
தமிழகத்தில், பல்வேறு மாவட்டங்களில், கோமாரி நோய் தாக்கி, ஆயிரக்கணக்கான மாடுகள் இறந்துள்ளது. அதனால், விவசாயிகள், பொதுமக்கள் கடும் இழப்புகளை சந்தித்துள்ளனர். அதேபோல், நாமக்கல் மாவட்டத்தில், 60க்கும் மேற்பட்ட மாடுகள், இந்நோய் தாக்கி பலியாகியுள்ளது.
அதன் காரணமாக, கால்நடை பராமரிப்புத்துறையினர், தீவிர தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். கோமாரி நோயை தடுக்கும் வகையில், மாவட்ட நிர்வாகம் சார்பில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாட்டுச்சந்தைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில், நாமக்கல் மாவட்டம் மோகனூர் பகுதியில், முதல் முறையாக, கோமாரி நோய் தாக்கிய இரண்டு மாடுகள், அடுத்தடுத்து உயிரிழந்தது.
குமரிபாளையம் பஞ்சாயத்து, சங்கரம்பாளையத்தை சேர்ந்தவர் சண்முகம், 32. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், அளவையாளராக பணியாற்றி வருகிறார். அவர், தனது வீட்டில் வைத்து, ஆறு மாடுகளை பராமரித்து வருகிறார். கோமாரி நோய் தாக்கம் அதிகரித்து வருவதை தொடர்ந்து, முன்னெச்சரிக்கையாக, கால்நடை பராமரிப்புத்துறையினர், மாவட்டம் முழுவதும் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டனர்.
அதேபோல், சங்கரம்பாளையத்திலும் மருத்துவ குழுவினர் சென்று, முகாம்

அமைத்து, பொதுமக்கள் மட்டும் விவசாயிகளிடம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ள அறிவுறுத்தினர். ஆனால், சண்முகம், தன்னிடம் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை.

அதனால், அவரது கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தாக்கியது. இது குறித்து அறிந்த மருத்துவர்கள், கோமாரி நோய் தாக்கிய கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். இருந்தும், அடுத்தடுத்து இரண்டு மாடுகள் உயிரிழந்தன. மேலும், நான்கு மாடுகள் இந்நோயால் தாக்கத்தால் அவதிப்பட்டு வருகிறது.

அந்த கால்நடைகளுக்கு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மோகனூர் யூனியன் பகுதியில், முதன் முறையாக கோமாரி நோய் தாக்கிய, இரண்டு மாடுகள் இறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கோமாரி நோய் தாக்கி மாடுகள் இறந்துள்ளதால், கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.11.2013**

## கோமாரி விழிப்புணர்வு கிராம சபை கூட்டம்

விழுப்புரம்,: விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு வேகமாக கோமாரி நோய் பரவி வருகிறது. இதனால் மாடுகள் பரிதாபமாக உயிரிழந்து வருகின்றனர். இதனால் கால்நடை வைத்திருக்கும் பொதுமக்கள் பீதியடைந்து வருகின்றனர். கோமாரி நோயை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சியர் கால்நடைத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி கிராமப் பகுதிகளுக்கு சென்று சோதனை நடத்தி குழுவை நியமித்துள்ளார்.

மேலும் இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடத்தவும் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி விழுப்புரம் அருகே உள்ள பஞ்சமாதேவி கிராமத்தில் கோமாரி நோய்தடுப்பு குறித்து சிறப்பு கிராம சபை கூட்டம் நடந்தது. ஊராட்சி மன்றத் தலைவர் பிரபாகரன் தலைமை தாங்கினார். சிறுவந்தாடு கால்நடை உதவி மருத்துவர் மகேந்திரன் கலந்து கொண்டு கோமாரி நோயை தடுக்க கன்று குட்டிகளுக்கு பால் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். மாடுகளின் கால்களை சுத்தமாக கழுவ வேண்டும். நோய் அறிகுறி இருந்தால் அருகில் உள்ள கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். கால்நடை ஆய்வா ளர் முத்துக்குமரன், ஊராட்சி செயலர் வேல்முருகன் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மேல்மலையனூர்: செஞ்சி வட்டம் இல்லோடு கிராமத்தில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் ராஜாராம் தலைமை தாங்கினார்.

துணைத் தலைவர் மணிவண்ணன், பற்றாளர் தனசேகரன், ஊராட்சி செயலர்

உதயராமகிருஷ்ணன், வார்டு உறுப்பினர் கிருஷ்ணன், பாபு, அரங்கேசன், சிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுப்பதற்கு பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. கால்நடைகளுக்கு கோமாரி வருவதற்கு முன் அறிகுறி தெரிந்தால் உடனடியாக பொது மக்கள் மருத்துவர்களிடம் சென்று தடுப்பு ஊசி போடவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

## மீன் வரத்து அதிகரிப்பு

கோவை, : கோவைக்கு மீன் வரத்து அதிகரித்தும் மீன்களின் விலை குறைந்தும் காணப்பட்டது. கிலோவுக்கு ரூ.30 முதல் ரூ.100 வரை விலை குறைந்து காணப்பட்டது.

தமிழக கடலோர பகுதிகளான கன்னியாகுமரி, ராமேஸ்வரம், தூத்துக்குடி, நாகப்பட்டினம் மற்றும் கேரளாவிலிருந்து இருந்து மீன்கள் விற்பனைக்காக கோவைக்கு கொண்டுவரப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு 350 டன் முதல் 450 டன் வரை மீன் வரத்து இருக்கும். கோவையிலிருந்து குன்னூர், கோத்தகிரி, திருப்பூர், பொள்ளாச்சி ஆகிய பகுதிகளுக்கு மீன்கள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

கார்த்திகை மாதம் சபரிமலை சீசன்என்பதால் பெரும்பாலானவர்கள் மீன், இறைச்சி உள்பட அசைவ பொருட்கள் சாப்பிடுவதை தவிர்ப்பதால் மீன், விலை குறைந்துள்ளது.

உக்கடம் லாரிப்பேட்டை மீன் மார்க்கெட்டில் ஒரு கிலோ வஞ்சரம் மீன் விலை ரூ.500 விற்பனையனாது தற்போது ரூ.300க்கும். வாவல் ரூ.350க்கு விற்பனையானது தற்போது ரூ300க்கும், அயிலை ரூ.130 விற்பனையானது , தற்போது ரூ.80க்கு. மத்தி மீன் ரூ.100க்கு விற்பனையானது, தற்போது ரூ50க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## நிலக்கடலைக்கு ரூ.200 கூடுதல் விலை

அனுப்பர்பாளையம், : அவினாசி அருகே சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. 4000 மூட்டை வந்திருந்தன. கடந்த வாரத்தை விட 1000 மூட்டைகள் குறைவாகும். மொத்தம் ரூ.64.20 லட்சத்துக்கு நிலக்கடலை விற்பனையானது.முதல் ரக நிலக்கடலை ரூ.4200 முதல் ரூ.4520 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ.3950 முதல் ரூ.4140 வரையிலும், பச்சை நிலக்கடலை ரூ.1800 முதல் ரூ2020 வரையிலும் ஏலம் போனது. குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை அதிகரித்ததால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.


இதே போல் அவிநாசி ஏல மையத்தில் நேற்று முன்தினம் நேந்திரன் வாழைத்தார் ஏலம் நடந்தது. மொத்தம் 4 ஆயிரம் வாழைத்தார்கள் வந்திருந்தன. சென்ற வாரத்தை விட 1500 நேந்திரன் வாழைத்தார் குறைவாக வந்திருந்தது. ஆனால் விலை கிலோவுக்கு ரூ.12 வரை அதிகரித்தது. நேந்திரன் வாழைத்தார் கிலோ ஒன்றுக்கு ரூ45 முதல் ரூ53.10 வரையிலும் கதளி வாழைத்தார் ரூ.20 முதல் ரூ.34 வரையிலும் ஏலம் போனது. மொத்தமாக ரூ.9 லட்சத்து 12ஆயிரத்து ஏலம் போனது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.11.2013**

## ஆந்திர மாநிலம் ஓங்கோல் அருகே புயல் நாளை காலை கரையை கடக்கிறது கடலுக்கு செல்ல வேண்டாம் என்று மீனவர்களுக்கு எச்சரிக்கை



சென்னை: மத்திய வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த மண்டலம் புயலாக மாறியது. இந்த புயல் நாளை காலை ஆந்திர மாநில நெல்லூருக்கும், மசூலிப்பட்டினத்துக்கும் இடையே ஓங்கோல் அருகே கரையை கடக்கும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

புயல் 'ஹெலன்': சமீபத்தில் வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நாகப்பட்டினம் அருகே கரையை கடந்தது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் 2 நாட்கள் பரவலாக பலத்த மழை பெய்தது.இந்த நிலையில் மத்திய வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. அது நேற்று தீவிரம் அடைந்து புயலாக மாறியது. அந்த புயலுக்கு 'ஹெலன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மண்டல இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

<u>நாளை கரையை கடக்கும்</u>

மத்திய வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைந்து காற்றழுத்த மண்டலமாகி மேலும் தீவிரம் அடைந்து புயலாகி உள்ளது. அதற்கு 'ஹெலன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த புயல் சென்னையில் இருந்து கிழக்கு வடகிழக்கில் 460 கிலோ மீட்டர் தூரத்திலும், ஆந்திர மாநிலம் காவாலியில் இருந்து 430 கிலோ மீட்டர் தூரத்திலும் மையம் கொண்டுள்ளது.

அது நாளை (வெள்ளிக்கிழமை) காலை ஆந்திர மாநிலம் நெல்லூருக்கும், மசூலிப்பட்டினத்துக்கும் இடையே ஓங்கோல் அருகே கரையை கடக்கும். அப்போது ஆந்திரா கடற்கரை பகுதியில் காற்றின் வேகம் வேகமாக இருக்கும்.

<u>மீனவர்களுக்கு எச்சரிக்கை</u>

இதனால் ஆந்திராவின் தெற்கு கடலோர பகுதிகளிலும், தமிழ்நாட்டின் வடக்கு கடலோர பகுதிகளிலும் உள்ள மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள். கடல் அலை உயரமாக வரும். கடல் கொந்தளிப்பாக இருக்கும். இன்று (வியாழக்கிழமை) தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்யும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

<u>புயல் எச்சரிக்கை கூண்டு</u>

புயல் காரணமாக சென்னை துறைமுகம், கடலூர் துறைமுகம், நாகப்பட்டினம் துறைமுகம், எண்ணூர், காட்டுப்பள்ளி துறைமுகம், புதுச்சேரி துறைமுகம், பாம்பன் துறைமுகம், தூத்துக்குடி துறைமுகம் ஆகியவற்றில் தலா 2–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

## ‘தட்டான் பூச்சிகளின் அழிவே டெங்கு காய்ச்சல் பரவ காரணம்’ மாணவிகளின் ஆய்வு அறிக்கையில் தகவல்



மேலூர்,

‘‘தட்டான் பூச்சிகளின் அழிவே மனிதர்களுக்கு டெங்கு காய்ச்சல் பரவுவதற்கு காரணம்’’ என்று மாணவிகள் தங்கள் ஆய்வறிக்கையில் கூறியுள்ளனர்.

<u>மாணவிகள் ஆய்வு</u>

மதுரை மாவட்டம் மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 9–ம் வகுப்பு மாணவிகள் கவுசல்யா, சாருமதி, மதுமிதா, பிரவீணா, பிரியதர்ஷினி, ருத்ரா, பிரியா, பாண்டிமாதேவி, ஆதித்யா, ஆர்த்தி ஆகியோர், ஆசிரியர் சூர்யகுமார் தலைமையில் கடந்த மாதம் கொசுப்பெருக்கம் தொடர்பாக, ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அதன்படி, கடந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் உயிர் பலிகள் அதிகம் நிகழ்ந்த மேலூரிலும், அதன் சுற்றுப்புற கிராமங்களான வல்லாளப்பட்டி, முனியாண்டிபட்டி, மங்களநகர், மல்லிகைநகர், நடுப்பட்டி, தாமரைப்பட்டி, பதினெட்டாங்குடி ஆகிய கிராமங்களிலும் கள ஆய்வு நடத்தினர். அப்போது, டாக்டர்கள், பொறியாளர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், கிராமமக்கள், கல்லூரி மாணவர்கள் என்று பலதரப்பினரிடம் அவர்கள் கருத்தாய்வு நடத்தினர்.

‘தட்டானின் அழிவு, கொசுக்களின் பெருக்கம்’

பின்பு, தங்களது ஆய்வறிக்கையை மாவட்ட நிர்வாகத்திற்கும், மேலூர் தாசில்தாருக்கும் அளித்தனர். அந்த அறிக்கையில் அவர்கள் கூறியிருப்பதாவது:–

‘‘தட்டான் பூச்சி இனங்கள் கொசுக்களை உணவாக உட்கொள்பவை. ஊசித்தட்டான் போன்ற சிலவகை தட்டான்கள், கொசு முட்டைகளை உணவாக உட்கொண்டு வாழ்பவை.

விவசாய நிலங்களில் சேதி உரங்கள் பயன்படுத்தப்படுவதாலும், செல்போன் டவர்களின் கதிர்வீச்சு, வறட்சி நிலை ஆகியவற்றின் காரணமாகவும் இந்த தட்டான் இனங்கள் அழிந்து வருகின்றன.

இதனால் இயற்கை சமநிலையும், உயிரிப் பல்வகைமையும் (பயோ டைவர்சிட்டி) பாதிக்கப்பட்டு தட்டான் பூச்சி இனங்கள் அழிந்து வருகின்றன. இதனால் கொசுக்களின் உற்பத்தி அதிகமாகி டெங்கு கொசுக்கள் ஊருக்குள் பரவுகின்றன.


டெங்கு கொசுக்கள்

மேலூரை சுற்றியுள்ள பகுதிகளில் தோண்டப்பட்ட கிரானைட் பள்ளங்களில் தேங்கும் நீரில் இருந்து ‘ ‘ஏடிஸ், எஜிப்டி‘ எனப்படும் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. இந்த பாறைக்குழிகள் டெங்குவை பரப்பும் கொசு உற்பத்தி மையங்களாக திகழ்கின்றன. இதனால் தான் மேலூர் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிக அளவில் ஏற்படுகிறது.

இவற்றை தடுக்க தட்டான்பூச்சி இனங்கள் பெருகிட, அதற்கான வழி வகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விவசாயத்திற்கு ரசாயன உரங்களுக்கு பதிலாக இயற்கை உரத்தை பயன்படுத்தலாம். மேலும் அறுவடை முடிந்த வயல்களில் உள்ள தோகைகளை தீயிட்டுக் கொளுத்துவது, குப்பைக்கூளங்கள், பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பது, போன்ற வெப்ப நிலைகளை உருவாக்குவதால் தட்டான் பூச்சி இனங்கள் இனப்பெருக்கம் குறைந்து அழிகின்றன.

கிரானைட் கற்கள் தோண்டப்பட்ட பள்ளங்களில் மீன்களை வளர்த்தால் கொசுப்பெருக்கம் குறையும்.''இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.ஆய்வில் ஈடுபட்ட மாணவிகளையும், ஆசிரியரையும் தலைமை ஆசிரியை டெய்சி நிர்மலா ராணி, மேலூர் தாசில்தார் ஆகியோர் பாராட்டினர்.

## வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்தது பருவமழை ஏமாற்றத்தால் விவசாயிகள் கவலை



ஆண்டிப்பட்டி,

பருவமழை ஏமாற்றி வருவதால் வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பருவமழை குறைந்தது

தேனி மாவட்டத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தாமதமாக கடந்த வாரம் தொடங்கினாலும், போதிய அளவு மழை பெய்யவில்லை. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் குறைந்த அளவு பெய்துள்ள இந்த மழையால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். குறிப்பாக மாவட்டத்தில் உள்ள பிரதான அணையான வைகை அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இந்த பருவமழை ஒரு சில நாட்களே பெயரளவில் பெய்துள்ளதால் வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்படவில்லை. மூல வைகை ஆற்றில்

இருந்து கடமலைக் குண்டு வரை மட்டுமே வைகைஆற்றில் சிறிதளவு நீர்வரத்து ஏற்பட்டுள்ளது.

பொதுவாக வடகிழக்கு பருவமழைக்காலத்தில் வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து அந்த தண்ணீர் மூலமே வைகை அணை ஒரு சில நாட்களில் நிரம்பி விடும். அந்தளவிற்கு தண்ணீர் வரத்து காணப்படும் வைகை ஆறு பருவமழை ஏமாற்றத்தால் கடமலைக்குண்டுவிற்கு கீழே மணலாறாக காட்சி அளிக் கிறது. குறிப்பாக 71 அடி உயர வைகை அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 45.57 அடி யாக காணப்பட்ட நிலையில், ஒரே நாளில் சுமார் ஒரு அடி குறைந்து உள்ளது. நேற்று அணை நீர்மட்டம் 44.32 அடியாக காணப் பட்டது.

நீர்வரத்து குறைந்தது

மேலும் நேற்று முன்தினம் முல்லைப்பெரியாறு அணை யில் இருந்து வினாடிக்கு 501 கன அடிநீர் திறந்து விடப்பட்ட போது, வைகை அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 467 கனஅடியாக காணப்பட்டது. ஆனால் அந்த நீர்வரத்து நேற்று பாதியாக குறைந்து போனது. நேற்று காலையில் வைகை அணைக்கு வினாடிக்கு 270 கன அடியாக நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் அணை நீர்மட்டம் மேலும் குறைய வாய்ப்பு உள்ளதால், வைகை அணை பாசன விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தற் போதைய நிலையில் வைகை அணையில் 1,334 மில்லியன் கன அடி நீர்இருப்பு உள்ளது.

முல்லைப்பெரியாறு அணை

தேனி மாவட்டத்திற்கு பிரதான நீர் ஆதாரமான முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் நேற்று 117 அடியாக குறைந்து காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 294 கன அடிநீர்வரத்தும், வினா டிக்கு 501 கன அடி நீர் வெளி யேற்றவும் படுகிறது. அணை யில் 2,087 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

மழையளவு

முல்லைப்பெரியாறு மற்றும் தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று காலை வரை பெய்த மழையளவு விவரம் (மில்லிமீட்டரில்) வருமாறு:-

முல்லைப்பெரியாறு-4.2, தேக்கடி-11.4, வைகை அணை -4.2, கூடலூர்-3.5, உத்தம பாளையம்-15, சோத்துப் பாறை-2, சண்முகாநதி-8, மஞ்சளாறு-6.

## அறந்தாங்கி பகுதியில் போதிய மழை பெய்யாததால் கருகும் நெற்பயிர்கள் விவசாயிகள் கவலை

அறந்தாங்கி,

அறந்தாங்கி பகுதியில் போதிய மழை பெய்யாத தால் சாகுபடி செய்யப் பட்ட நெற்பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தண்ணீர் வரவில்லை

புதுக்கோட்டை மாவட்டத் தில் அறந்தாங்கி வருவாய் கோட்டத்தின் ஒரு பகுதி காவிரிப்பாசனப் பகுதியாக விளங்கி வருகிறது. எஞ்சிய பகுதியில் மழையை நம்பி நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேட்டூர் அணை யில் போதுமான தண்ணீர் இருந்த போதிலும், சேலம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங் களில் பெய்துவரும் மழையின் காரணமாக அடிக்கடி மேட்டூர் அணை மூடப்படுவதாலும், கல்லணையில் இருந்து தண் ணீர் திறக்கப்படும் தலைப் பகுதியில் உள்ள ஆற்றின் கரை பலமில்லாமல் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதாலும், அறந்தாங்கி கடைமடைப் பகுதிக்கு போதுமான தண் ணீர் வரவில்லை.

## கருகும் நெற்பயிர்கள்

இதனால் கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதியான நாகுடி பிரிவில் உள்ள ஏரிகள் பலவற்றிற்கு தண்ணீரே செல்லாத நிலை உள்ளது. மற்ற ஏரிகளுக்கு குறைந்த அளவே தண்ணீரும் சென்றுள்ளது. மேலும் வங்கக்கடலில் புயல் சின்னம் உருவான நிலையிலும் அறந் தாங்கி பகுதியில் மழை பெய்ய வில்லை. மழை பெய்யாத தாலும், ஏரியில் இருந்து வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாததாலும் நேரடி நெல் விதைப்பு செய்துள்ள பயிர்கள் கருகி வருகின்றன.

இதேபோல மழையை நம்பி இடையார், புதுவாக் கோட் டை, ரெத்தினக்கோட்டை உள்ளிட்ட அறந்தாங்கி கோட்டத்தின் பல்வேறு பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நேரடி நெல் விதைப்பு செய்துள்ள பயிர்கள் கருகி வருகின்றன. மேலும் பல்வேறு ஊர்களில் கருகி வரும் பயிர்கள் வீணாவதைக் கண்டு, வயலின் சொந்தக்காரர்களே தங்களின் மாடுகளை, வயல்களில் கட்டி மேயவிடும் துர்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

## விவசாயிகள் கவலை

கடந்த ஆண்டும் வறட்சி யால் அறந்தாங்கி பகுதி விவ சாயம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் நிவாரணம் பெற்ற நிலையில், தற்போதும் மழை மற்றும் காவிரியில் போதுமான தண்ணீர் வராத காரணங்களால், இந்த வருடமும் சாகுபடி பாதிக்கப் பட்டு வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும் என்ற பழமொழிக்கு ஏற்ப அறந்தாங்கி பகுதி விவசாயிகள் மழை பெய்யாததாலும், ஆற்றில் தண்ணீர் வராததாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## திருச்சி மாவட்டத்தில் அடர் நடவு முறையில் 188 ஏக்கரில் மாமரக்கன்றுகள் நட திட்டம் தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல்



திருச்சி,

திருச்சி மாவட்டத்தில் அடர் நடவு முறையில் 188 ஏக்கரில் மாமரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு உள்ளதாக தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல் தெரிவித்தார்.

<u>ஆய்வு</u>

உப்பிலியபுரம், மண்ணச்சநல்லூர் பகுதியில் தோட்டக்கலை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை திருச்சி தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

திருச்சியில் தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மா, கொய்யா, எலுமிச்சை, நெல்லி போன்றவற்றுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு திருச்சி முழுவதும் 188 ஏக்கரில் மாமரக்கன்றுகள் அடர்நடவு முறையில் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

<u>அடர் நடவு முறை</u>

மாமரக்கன்றுகளை சாதாரண முறையில் ஒரு எக்டருக்கு 100 கன்றுகள் நடமுடியும். ஆனால் அடர் நடவு முறையில் ஒரு எக்டேருக்கு 400 மரக்கன்றுகள் நட முடியும். திருச்சி மாவட்டத்தில் 75 எக்டரில் அடர் நடவு முறையில் மாமரக்கன்றுகள் நடுவதற்கான திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பெங்களூரா, அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்த் ஆகிய 4 வகையான புது ரக மாமரக்கன்றுகள் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர்பாசனம் அமைக்க 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. அடர் நடவு முறையில் வளர்க்கப்படும் மாமரக்கன்றுகளை கவாத்து செய்தால் 3 ஆண்டுகளில் வழக்கமான விளைச்சல் 10 டன்னை விட 25 டன் மா விளைச்சல் கிடைக்கும். 10 ஆண்டில் 3 மடங்கு அதிகமான விளைச்சல் கிடைக்கும். 40 ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக இந்த விளைச்சலை பெற முடியும்.

<u>நீர் சேமிப்பு</u>

சொட்டு நீர்பாசனம் செய்வதன் மூலம் நீரை அதிக அளவில் சேமிக்க முடியும். தேவையற்ற களைகள் வளருவதையும், செலவுகளையும் தவிர்க்க முடியும். 10 ஆண்டுகளில் 3 மடங்கு மா சாகுபடி அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. பழைய மாந்தோப்புகளை புதுப்பிக்கும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் சுப்பையா (துறையூர்), கிருஷ்ணமூர்த்தி (மண்ணச்சநல்லூர்), ரவிச்சந்திரன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

## கோமாரி நோய் விழிப்புணர்வு கிராம சபை கூட்டம்



சின்னசேலம்,

சின்னசேலம் ஒன்றிய பகுதிகளில் தகரை கிராமத்தில் கோமாரி நோய் விழிப்புணர்வு குறித்த சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. கூட்டத் திற்கு ஊராட்சி மன்ற தலைவர் பெரியசாமி தலைமை தாங்கி னார். சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலர் கோவிந்த சாமி முன்னிலை வகித்தார். இதில் சின்னசேலம் கால்நடை உதவி மருத்துவர் ஜெயகாந்தி கலந்து கொண்டு கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு குறித்து விளக்கி பேசினார். தடுப்பூசி போடும் முறை, முன் எச்ச ரிக்கையாக சிகிச்சை மேற் கொள்வது. கால் நடைகளை பாதுகாப்பது பற்றியும் கூறினார்.

இதேபோல் தெங்கியா நத்தம் குமரேசன் நமசிவாய புரம் மகேஸ்வரி முத்துசாமி, நயி னார்பாளையம் ஆகிய ஊராட்சி மன்ற தலை வர்கள் தலைமையில் கிராம சபை கூட்டங்கள் நடந்தது. இதில் ஒன்றிய அலுவலர்கள் மகாலட்சுமி, பன்னீர் செல்வம், ரேணுகாதேவி, ராஜசெல்வி ஆகியோர் பற்றாளர்களாக கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் கள் ராஜேந் திரன், கல்யாண சுந்தரம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமால் ஆகியோர் மேற்பார்வை யிட்டனர்.

## திருவள்ளூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 22-ந் தேதி நடக்கிறது

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் வருகிற 22–ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் கலெக்டர் வீரராகவராவ் தலைமையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்த்துறை, மின்சார வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மை பொறியியல்துறை, மீன்வளத்துறை, கால்நடைத்துறை., வேளாண்விற்பனைத்துறை மற்றும் இதர வேளாண்சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் வீரராகவராவ் கேட்டுகொண்டுள்ளார்.

## *திருச்சி மாவட்டத்தில் அடர் நடவு முறையில் 188 ஏக்கரில் மாமரக்கன்றுகள் நட திட்டம் தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல்*



திருச்சி,

திருச்சி மாவட்டத்தில் அடர் நடவு முறையில் 188 ஏக்கரில் மாமரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டு உள்ளதாக தோட்டக்கலை துணை இயக்குனர் தகவல் தெரிவித்தார்.

<u>ஆய்வு</u>

உப்பிலியபுரம், மண்ணச்சநல்லூர் பகுதியில் தோட்டக்கலை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை திருச்சி தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

திருச்சியில் தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் மா, கொய்யா, எலுமிச்சை, நெல்லி போன்றவற்றுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு திருச்சி முழுவதும் 188 ஏக்கரில் மாமரக்கன்றுகள் அடர்நடவு முறையில் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

<u>அடர் நடவு முறை</u>

மாமரக்கன்றுகளை சாதாரண முறையில் ஒரு எக்டருக்கு 100 கன்றுகள் நடமுடியும். ஆனால் அடர் நடவு முறையில் ஒரு எக்டேருக்கு 400 மரக்கன்றுகள் நட முடியும். திருச்சி மாவட்டத்தில் 75 எக்டரில் அடர் நடவு முறையில் மாமரக்கன்றுகள் நடுவதற்கான திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பெங்களூரா, அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசந்த் ஆகிய 4 வகையான புது ரக மாமரக்கன்றுகள் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர்பாசனம் அமைக்க 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. அடர் நடவு முறையில் வளர்க்கப்படும் மாமரக்கன்றுகளை கவாத்து செய்தால் 3 ஆண்டுகளில் வழக்கமான விளைச்சல் 10 டன்னை விட 25 டன் மா விளைச்சல் கிடைக்கும். 10 ஆண்டில் 3 மடங்கு அதிகமான விளைச்சல் கிடைக்கும். 40 ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக இந்த விளைச்சலை பெற முடியும்.

<u>நீர் சேமிப்பு</u>

சொட்டு நீர்பாசனம் செய்வதன் மூலம் நீரை அதிக அளவில் சேமிக்க முடியும். தேவையற்ற களைகள் வளருவதையும், செலவுகளையும் தவிர்க்க முடியும். 10 ஆண்டுகளில் 3 மடங்கு மா சாகுபடி அதிகரிக்க திட்டமிடப்பட்டு உள்ளது. பழைய மாந்தோப்புகளை புதுப்பிக்கும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் சுப்பையா (துறையூர்), கிருஷ்ணமூர்த்தி (மண்ணச்சநல்லூர்), ரவிச்சந்திரன் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

## கிழக்கு இந்தோனேசியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்; ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவு




ஜகார்த்தா,

கிழக்கு இந்தோனேசியாவில் சக்திவாயந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகியுள்ளது என்று அமெரிக்க புவியில் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தினால் அங்குள்ள கட்டிடங்கள் குலுங்கியுள்ளன.

## *வெம்பக்கோட்டையில் அதிகபட்சமாக 61 மி.மீ. மழைபதிவு*



சிவகாசி, -

தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக பல இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் நேற்று சிவகாசி, திருத்தங்கல், வெம்பக் கோட்டை போன்ற இடங்களில் பலத்த மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக வெம்பக்கோட்டையில் 61.2 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. சிவகாசி உட்கோட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் பதிவான மழை அளவு வருமாறு:-

சாத்தூர் 12 மில்லி மீட்டர், சிவகாசி 50.2 மில்லி மீட்டர், வெம்பக் கோட்டை 61.2 மில்லிமீட்டர், பிளவக்கல் 9 மில்லி மீட்டர், கோவி லாறு 6 மில்லி மீட்டர் ஆகும்.